RE/MAX BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710



மலர்:- 29, 10 மார்ச் 2023 இதழ்:- 46

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600


## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

# இலங்கை மீது தொடர் அழுத்தம் பிரயோகிக்க தயாராகும் இந்தியா!

உள்ளூராட்சித் தேர்தலை உடனடியாக நடத்துமாறு இலங்கை அரசுக்கு அமெரிக்கா தொடர் நெருக்குதல்களை வழங்கி வரும் நிலையில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் 13ஆவது அரசமைப்புச் சரத்தை நடை முறைப்படுத்துமாறும், காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை தமிழர்களுக்கு வழங்குமாறும் இலங்கைக்கு தொடர் அழுத்தத்தைப் பிரயோகிக்க இந்தியா தயாராகி வருகின்றது என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (5ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் 10 ஆண்டுகளில் 50 பாடசாலைகளை மூட வேண்டி வரும் என ஆறு திருமுருகன் சுட்டிக்காட்டு



இன்னும் ஒரு பத்து ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் கிட்டத்தட்ட 50 பாட சாலைகள் மூட வேண்டி வரும் என கணிப்பு ஒன்று செய்யப்பட்டுள்ளது என சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் தெரிவித்தார்.

உரும்பிராய் ஞானவைரவர் சமூகஅறக் கட்டளை சார்பில் உரும்பிராய் பகுதியை சேர்ந்த மாணவர்களுக்கான கல்வி உதவிகள் வழங்கும் நிகழ்வு உரும்பிராயில் இடம்பெற்றது. (4ம் பக்கம் பார்க்க)



## கீரிமலை சிவன் ஆலயம் இடிக்கப்பட்டு ஜனாதிபதி மாளிகை அமைக்கப்பட்டமை இனவாதச் செயல் - அருட்தந்தை

சிவன் ஆலயம் இடிக்கப்பட்டு ஜனாதிபதி மாளிகை அமைக்கப்பட்டமை இனவாதத்தையே காட்டி நிற்கின்றது என மலையக சமூக ஆய்வு மையத்தின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார். (3ம் பக்கம் பார்க்க)

## உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 30வது ஆண்டு விழா 23 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமை

எமது இனிய வாசகர்கள், அபிமானிகள், கலா ரசிகர்கள் அனைவரது கவனத்திற்கு! இவ்வாண்டு மண்டபத்தின் இருக்கைகளின் நம்பர்கள் நுழைவுச் சீட்டில் அச்சடிக்கப்பட்டுள்ளது. எனவே அன்புள்ளங்கள் இறுதி நேரம் வரை காத்திருக்காமல் 416 841 9600 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முற்கூட்டியே அனுமதிச் சீட்டினைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் ஒத்துழைப்புக்கும் ஒத்தாசைக்கும் நன்றி! வணக்கம்!


NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan LL.B.
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE

THINKING OF

# SELLING OR BUYING A HOME?



## Siva Kandiah
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

20 Years Real Estate Experience

## Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

## Piravien Siva
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com





**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply


HOMELIFE HIGHER STANDARDS


**Bus: 416.298.3200**
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Lawrence/ Galloway

**Scarborough** $499,900
Bedrooms: 4 Washrooms: 2
Close To Shopping, Hospitals

### Finch & Pharmacy

**Scarborough** $543,900
Bedrooms: 2 Washrooms: 1
Large Open Concept Area


### Eglinton/Markham

**Scarborough** $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Renovated with Oversized Balcony

### Angeline St. N & Springdale

**Kawartha Lakes** $749,900
Bedrooms: 3 Washrooms: 2
Brand New, Walkout Basement

### Kennedy & Dougall Ave

**Caledon** $799,888
Bedrooms: 3 Washrooms: 3
Semi-Detached Home

### Queens Quay & Lower Sherbourne

**Toronto** $889,000
Bedrooms: 2 Washrooms: 2
Waterfronts Luxury Corner unit

### Brisdale & Clockwork

**Brampton** $1,985,000
Bedrooms: 4 Washrooms: 4
Assignment Sale, Brand New Home

### Meadowvale / 401

**Scarborough** $1,899,999
Bedrooms: 4+3 Washrooms: 5
Stunning Top To Bottom Renovations

### Kipling Ave / Finch Ave


**Toronto** $549,900
Bedrooms: 2 Washrooms: 2
Location Location Location!!!

### Simcoe St & Winchester

**Oshawa** $549,999
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept Layout, Large Windows

### Woodbridge Ave/ Clarence

**Vaughan** $799,000
Bedrooms: 1+1 Washrooms: 1
Low-Rise Boutique Style Building

### Eglinton Ave. W /Mavis

**Mississauga** $799,900
Bedrooms: 2+1 Washrooms: 2
Charming Townhouse In A Great Area

### Keele/Sheppard

**Toronto** $810,000
Bedrooms: 3 Washrooms: 2
Bungalow-Raised Excellent Property

### Mccowan & Ellesmere


**Scarborough** $3,200
Bedrooms: 3 Washrooms: 1
Hardwood Floors Throughout

### Martingrove/Rexdale


**Toronto** $2,900
Bedrooms: 3 Washrooms: 1
Renovated Main Floor Unit

### Markham & Sheppard


**Scarborough** $2,500
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Unit With Parking

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 30வது ஆண்டு விழா 23 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமை

என் இனிய வாசகர்களே!

கனடிய மண்ணில் கடந்த 30 ஆண்டுகளாக எந்தச் செய்தியையும் முந்தித் தரும் ஒரே ஏடான உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 30வது ஆண்டு விழா எதிர்வரும் 23 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமை அன்று மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

கலைமாமணி ராஜேஸ் வைத்தியா அவர்களின் வீணை இசைக் கச்சேரி நடைபெறவுள்ளது. மிக நீண்ட காலத் திற்குப் பின்னர் கலைமாமணி ராஜேஷ் வைத்தியா அவர்கள் கனடாவில் கலந்து நிகழ்ச்சி இதுவாகும்.

கடந்த 30 ஆண்டுகளாக இடையூறு இன்றியும் தடையூறு இன்றியும் வெளி வந்து கொண்டிருக்கும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை கடந்த 3 ஆண்டுகளுக்குள் ஏற்பட்ட கொரானா என்னும் கொடிய நோய்த் தாக்கத்தினால் ஏற்பட்ட பொருளாதார சரிவும் நெருக்கடியும் காரணமாக பல்வேறு சவால்களை எதிர் கொண்டுள்ளது. குறிப்பாக விளம்பரம் தருகின்ற வர்த்தகர்களின் வர்த்தகத்தில் ஏற்பட்ட சரிவு எமக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது அனைத்து ஊடகத்துறையினருக்கும் முன்னால் உள்ள சவால்கள் ஆனாலும் எமக்குஅதுவொரு பெரும் தாக்கமாகும். காரணம் நாம் இன்றும் தாயகத்திலும் கொழும்பிலும் செய்தியாளர்களை வைத்து ஊதியம் வழங்கியே செய்திகளைப் பெற்று வருகின்றோம் அதனாலேயே இன்றும் எந்தச் செய்தியையும் முந்தித் தருகின்ற




ஊடகமாக ஈழநாடு விளங்குகின்றது என்பதை வாசகர்கள் நன்றாகப் புரிந்து கொண்டிருப்பார்கள் என்பது திண்ணம்.

இந்தப் பொருளாதார நெருக்கடியைச் வெற்றிகரமாக கடந்து ஈழநாடு தொடர்ந்து பயணிக்க வாசகர்களாகிய நீங்கள் தான் கை கொடுக்க வேண்டும். இந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே 30வது ஆண்டு விழா நடைபெறவுள்ளது.

எமது இனிய வாசகர்கள், அபிமானிகள், கலா ரசிகர்கள் அனைவரும் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பிக்குமாறு அன்புரிமையுடன் அழைக்கின்றேன்.

இவ்வாண்டு மண்டபத்தின் இருக்கைகளின் நம்பர்கள் நுழைவுச் சீட்டில் அச்சடிக்கப்பட்டுள்ளது.

எனவே அன்புள்ளங்கள் இறுதி நேரம் வரை காத்திருக்காமல முற்கூட்டியே அனுமதிச் சீட்டினைப் பெற்றுக் கொள்ளுங்கள். 416 841 9600 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். நன்றி! வணக்கம்!

# சிவன் ஆலயம் இடிக்கப்பட்டு ஜனாதிபதி மாளிகை அமைக்கப்பட்டமை இனவாதச் செயல்- அருட்தந்தை



சிவன் ஆலயம் இடிக்கப்பட்டு ஜனாதிபதி மாளிகை அமைக்கப்பட்டமை இனவாதத்தையே காட்டி நிற்கின்றது என மலையக சமூக ஆய்வு மையத்தின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார். அவரால் நேற்று (09) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் இருந்த வலி வடக்கு பிரதேச போர்த்துக்கீசர் கால மிக தொன்மை வாய்ந்த கீரிமலை சிவன் ஆலயம் இடிக்கப்பட்டு ஜனாதிபதி மாளிகை அமைக்கப்பட்டுள்ளது. இது இனவாத, மதவாத அரச பயங்கரவாதத்தினதும் அதற்கு துணை நிற்கும் இயந்திரமான இராணுவத்தினதும் கொடூர முகத்தை மீண்டும் உறுதி செய்துள்ளது. இத்தகைய நாகரீகம் அற்ற செயலை மலையக சமூக ஆய்வு மையம் மற்றும் மலையக தமிழர் பண்பாட்டுப் பேரவை என்பன வன்மையாக கண்டிப்பதோடு துன்புற்றிருக்கும் மக்களின் வேதனையோடு நாமும் நிற்கின்றோம் என கூறுவதோடு அரசு இந்து மக்களிடத்தும், தமிழ் மக்களிடத்தும் இச்செயல் தொடர்பாக மன்னிப்பு கோருவதோடு அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி மாளிகை முற்றாக அங்கிருந்து அகற்றி அங்கு இந்து மக்களின் சுதந்திர வழிபாட்டுக்கும் இடம் அளிக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றது.


இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசம் என்பது பாதுகாப்பான பிரதேசம் என்று பொருள்படும். அத்தகைய பிரதேசத்தில் பயங்கரவாத செயலுக்கு இடம் உண்டா? இராணுவ தேவைக்கு அப்பால் கட்டிடம் நிர்மாணிக்கப்படுமாயின் அதற்கு அனுமதி அளித்தது யார்? அத்தகைய கட்டிடம் அமைக்க தொன்மை வாய்ந்த இந்து ஆலயத்தினை அழிப்பதற்கு அனுமதி அளித்தது யார்? தொல்லியல் திணைக்களம் அனுமதி அளித்ததா? எத்தகைய அனுமதியும் இல்லாத கட்டிடம் அமைக்கப்பட்டு தொன்மை வாய்ந்த ஆலயம் அழிக்கப்பட்டிருப்பின் அவ்வாறு செய்தவர்கள் நீதியின் முன் நிறுத்தப் பட வேண்டும். அவ்வாறு நீதியின் முன் நிறுத்தப்படுவார்களா? நிறுத்தப் பட்டாலும் நீதி கிடைக்குமா? என்பதே எம்மை சூழ்ந்துள்ள கேள்விகள்.

வடகிழக்கின் பிரதேசங்களை தொல்லியல் திணைக்களம் கையகப்படுத்த முனைவதும் சிங்கள பௌத்த பிரதேசங்களாக அடையாளப்படுத்த முனைவதும் நாம் அறிந்ததே.

நாட்டின் எல்லா சந்திகளிலும், உயர்ந்த மலைகளிலும் புத்தர் சிலைகளை அமைக்கும திட்டமிட்ட செயல் தொடர்கின்றது. மலையக பிரதேசம் ஆக்கிரமிக்கும் நோக்கில் இச் செயற்பாடு தீவிரபடுத்தப்பட்டிருக்கின்றது.

இவற்றிற்கும் மேலாக குருந்தூர் மலைப்பிரதேசத்தில் எத்தகைய கட்டிட பணிகளும் நடக்கக் கூடாது எனும் நீதிமன்ற கட்டளையை மீறி விகாரை அமைக்கும் பணி முடிவுறு நிலையில் உள்ளது எனவும் தெரிவித்தார்.

Balachandran Law Office
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



# யாழ்ப்பாணத்தில் 10 ஆண்டுகளில் 50 பாடசாலைகளை மூட வேண்டி வரும் என ஆறு திருமுருகன் சுட்டிக்காட்டு

இன்னும் ஒரு பத்து ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் கிட்டத்தட்ட 50 பாடசாலைகள் மூட வேண்டி வரும் என கணிப்பு ஒன்று செய்யப்பட்டுள்ளது என சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் தெரிவித்தார்.

உரும்பிராய் ஞானவைரவர் சமூகஅறக் கட்டளை சார்பில் உரும்பிராய் பகுதியை சேர்ந்த மாணவர்களுக்கான கல்வி உதவிகள் வழங்கும் நிகழ்வு உரும்பிராயில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு-கிழக்கு பகுதிகளில் இருக்கும் பெரிய பிரச்னை சனத்தொகை குறைந்துள்ளமை. அதனால் இன்னும் ஒரு பத்து ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் கிட்டத்தட்ட 50 பாடசாலைகள் மூட வேண்டி வரும் என கணிப்பு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

புங்குடுதீவு, வேலணை மற்றும் அனலைதீவு போன்ற பகுதிகளில் பாடசாலைகளானது மூடப்பட்டு வருகின்றது. போதாக்குறைக்கு தீவகத்தில் இன்டர்நஷனல் பாடசாலை ஒன்றினை பெரிய அளவில் ஏற்பாடு செய்து மதம் சார்ந்த பாடசாலை ஆக அனைவரையும் ஈர்க்கின்றார்கள்.

ஏற்கனவே உள்ள பாடசாலைகள் கதவு மூடப்படுகின்ற தருவாயில் இன்டர்நஷனல் பாடசாலை திறக்கப்படுகிறது. இவ்வாறான நிலையில் தனியாரை தட்டிக் கேட்பதற்கு யாரும் இல்லாத



நிலை காணப்படுகிறது. அறச் சிந்தனையுடன் ஆரம்பிக்கப்படுகின்ற இவ் அறக்கட்டளை முதலாவது கட்டத்தில் 50 லட்சத்துக்கு மேல் பணி செய்து உள்ளீர்கள். அடுத்த கட்டங்களில் இப்பகுதிகளில் மூடு போன்ற நிலையில் உள்ள பாடசாலைகளை மூடாமல் செய்ய என்ன வழி? அத்துடன் மருத்துவ உதவி, சமூகத்திற்கான அவசியதேவைக்குரிய உதவி என அனைத்தையும் பகுதி பகுதிகளாக பிரித்து வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு எதை செய்ய விருப்பமோ அவர்கள் அதை அபிவிருத்தி செய்யலாம்.

யாழ்ப்பாணத்தில் இருந்த அறக் கட்டளைகள் பல பேணுவாரற்று கைவிடப்பட்டன. யாழ்ப்பாணத்தில் செவ்வாய் கிழமை மடம், வெள்ளிக்கிழமை மடம், அன்னசத்திர மடம் மற்றும் கீரிமலையில் இருந்த மடம் ஒன்றுக்கும் கோடிக் கணக்கில் அறக்கட்டளையில் பணம் இருந்தது. இப்பொழுது அந்தப் பணம் எங்கே என்று தெரியாது.

சைவ பரிபாலன சபை வெளியிடும் இந்து சாதனம் எனும் பத்திரிகையில் அறக்கட்டளைகளின் விவரம், அதற்காக விடப்பட்ட நிலங்களின் தொகையும்

அதில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அது 1917ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்த அறக்கட்டளைகள் தொடர்பானது. இன்று அவை இருந்த இடங் களுக்கு தெரியாது, மடங்கலும் இல்லை. அவ்வாறாக அதைத் தேடிப் பார்த்தால் அதில் கொத்து ரொட்டி கடைகள் உள்ளன.

யாழ்ப்பாணத்துக்கு வந்த ஆபத்து அறத்தை சரியாக பேணாத காரணத்தால் கர்ம வினைகளை அனுபவிக்கின்றோம். யாழ்ப்பாணத்தில் இருப்பாலைச் சந்தியிலிருந்த செவ்வாய்க் கிழமை மடத்தில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் அன்னதானம் இடம்பெறும். ஆகவே அறக் கட்டளைகள் நீண்ட ஆயுளோடு இருக்க சிறந்த வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

23 வருடங்களாக சிவபூமி அறக் கட்டளை, இரண்டு பாடசாலை, இரண்டு முதியோர் இல்லம் மற்றும் ஆசிரமங்கள் ஐந்து போன்றவற்றை நடத்தி வருகின்றோம். புலம்பெயர் சமூகமானது இவ்வாறான பணிகளை மேற்கொண்டு வருகின்றது.


உரும்பிராய் இந்து கல்லூரியை பாதுகாக்க வேண்டும். ஏனெனில் அது வரலாறு படைத்த பாடசாலை. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடாதிபதியாக இருந்த பேராசிரியர் கணேசலிங்கம் இறப்பதற்கு முன் அதனை எவ்வாறு ஆயினும் காப்பாற்ற வேண்டும் என என்னிடம் கூறி கவலை அடைந்தார். இஸ்லாமியர்களின் அறக் கட்டளையே இன்று இலங்கையில் உச்சக் கட்டத்தில் உள்ளது என்றார்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சசிகரன் தவராஜா (கண்ணன்)

தச்சன்தறை அல்வாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் உணாப்பிளவு முல்லைத்தீவை வதிவிடமாகவும் இங்கிலாந்தை கொண்டிருந்த கண்ணன் என்று அன்பாக அழைக்கப்படும் திரு சசிகரன் தவராஜா அவர்களது முதலாவது ஆண்டுநினைவு நாள் 10 மார்ச் 2023 வெள்ளிக்கிழமை யாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். சசிகரன் தவராஜா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு


ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

14 மார்ச் 2023 செவ்வாய்க்கிழமை:- காரடையா நோன்பு விரதம்

19 மார்ச் 2023 ஞாயிற்றுக் கிழமை- பிரதோஷ விரதம்

04 ஏப்ரல் 2023 செவ்வாய்க் கிழமை- பங்குனி உத்தரம்

விசேட அபிஷேகமும் பூஜையும் காலை 10.00 மணிக்கு நடைபெறும். பால் குடம் எடுக்க விரும்பும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# இலங்கை மீது தொடர் அழுத்தம் பிரயோகிக்க தயாராகும் இந்தியா!

உள்ளூராட்சித் தேர்தலை உடனடியாக நடத்துமாறு இலங்கை அரசுக்கு அமெரிக்கா தொடர் நெருக்குதல்களை வழங்கி வரும் நிலையில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் 13ஆவது அரசமைப்புச் சரத்தை நடைமுறைப்படுத்துமாறும், காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை தமிழர்களுக்கு வழங்குமாறும் இலங்கைக்கு தொடர் அழுத்தத்தைத் பிரயோகிக்க இந்தியா தயாராகி வருகின்றது என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை திட்டமிட்டபடி நடத்துமாறு அமெரிக்க செனட்டின் வெளியுறவுக் குழு வெளியிட்ட சிறப்பு அறிக்கைக்கு மறுநாள் வியாழக்கிழமை இந்தியாவும் இலங்கை தொடர்பான சிறப்பு அறிவிப்பை வெளியிட நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்திய ஊடகங்களில் இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. அமெரிக்கா வெளியிட்ட அறிவிப்பின் அடிப்படையில் இந்த அறிவிப்பும் வெளியிடப்பட்டதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் ஒத்துழைப்பை மேன்மைப்படுத்துவதற்கு இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து கூட்டு முயற்சியில் ஈடுபடவுள்ளதாகவும், இலங்கையின் பாதுகாப்பு நிலைமையை பலப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் அவற்றுள் முக்கியமானதாக இருக்கும் எனவும் அந்தஅறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த கோவிட் - 19 பெருந்தொற்றுக்குப் பின்னர் மற்றும் அரசியல் நெருக்கடிகள் காரணமாக இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப இந்தியா கிட்டத்தட்ட 4 பில்லியன் டொலர்களை வழங்கியதாகவும், அமெரிக்காவும் கோவிட் பெருந்தொற்று காலத்தில் 3.4 மில்லியன் டொலர் மற்றும் 70 மில்லியன் டொலர்களை உதவியாக வழங்கியதாகவும் அந்த அறிவிப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

கோவிட் பெருந்தொற்று காலத்துக்குப் பிந்தைய காலத்தில் 9 கடன்தொகை வழங்கப்பட்டது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் சமூக பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளதாக அந்த கடிதத்தின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கையை மீட்பதற்கு சீனா ஆதரவு வழங்குவதைத் தவிர்த்து வந்த போதும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்தைச் சீர்குலைக்க முயற்சித்த போதும் அமெரிக்கா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் இலங்கைக்கு ஆதரவை வழங்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறும், காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை தமிழர்களுக்கு வழங்குமாறும் இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கவுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழு பொய்யுரைக்கிறது - தமிழ்க்கட்சிகள் குற்றச்சாட்டு

வடக்கு வாழ் தமிழ் மக்கள் உள்ளகப் பொறிமுறைக்கு இணங்கி விட்டதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பொய்யுரைத்துள்ளதென தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் பகிரங்கமான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சார்பில் அதன் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக்கட்சிகளின் ஒன்றான ஈழ மக்கள் புரட்சிகர விடுலை முன்னணியின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரே மேற்கண்டவாறு குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்கள்.




அத்துடன், போர் நிறைவுக்கு வந்து 13ஆண்டுகளாகின்ற நிலையில் தமிழ் மக்கள் இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீதிகோரி வருவதோடு, அவர்கள் உள்ளகப்பொறிமுறையில் நம்பிக்கையில்லை என்பதையும், சர்வதேச பங்களிப்புடனான விசாரணையொன்றே அவசியம் என்பதையும் ஆணித்தனமாக வெளிப்படுத்தியுள்ளதாகவும் அப்பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# அவுஸ்திரேலியா பொதுத் தேர்தலில் களமிறங்கும் ஈழத்தமிழர் சுஜன் செல்வன்!




மே 27 ஆம் திகதி நடைபெற உள்ள அவுஸ்திரேலிய சமஷ்டி தேர்தலில் கிரீன் கட்சி சார்பாக செல்வன் சுஜன் களமிறங்கப்பட்டுள்ளார். அவுஸ்திரேலியாவில் மனித உரிமை செயற்பாடு, இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான செயற்பாடு, குடிவரவு குடியழ்வு செயற்பாடுகளில் தமிழர்களுக்கு முழு ஆதரவை வழங்கி வரும் சுஜன் செல்வன் சிட்னி மாநில தேர்தலில் போட்டியிடுகிறார்.

புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் அதிக தமிழர்களைக் கொண்டுள்ள அவுஸ்திரேலியா மாநிலத்தில் தமிழர்களின் உரிமைக்காக குரல் கொடுத்து வரும் சுஜன் செல்வன் அவர்கள் சிறந்த சமூக, மனித உரிமை செயற்பாட்டாளராகவும் பணி புரிந்து வருகின்றார்.

15வயதில் நாட்டை விட்டு புலம் பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் வதிவிடத்துடன் வாழ்ந்து வரும் சுஜன் அவர்கள் 2015 ஆம் ஆண்டு முதல் கிரீன் கட்சியில் பல தேர்தல்களில் களமிறங்கியுள்ளார்.

கிரீன் கட்சியானது சமூக நல செயல்பாடு மனித உரிமை செயற்பாடு மக்கள் நலன் திட்டங்களை முன்னெடுக்கும் ஒரு கட்சியாக திகழ்கின்றதால் எமது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு குரலாக தான் அதில் களமிறங்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் எமது மக்களுடைய பிரச்சனைகளுக்கு புலம் பெயர்ந்துள்ள மக்களது பிரச்சினைகளுக்கு தன்னால் இயன்ற உதவிகளை செய்ய முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கை தமிழர் ஒருவர் பலவந்தமாக நாடு கடத்தப் படுகின்றார் என தகவல்கள் வெளியாகின்றன.

யொன்கா ஹில் தடுப்பு முகாமிலிருந்து இவர் நாடு கடத்தப் படுகின்றார் இதற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும் இடம் பெறுகின்றன.

# தமிழ்த் தலைவர்களை எவர் விரட்டுவது?

தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் - ராஜபக்ஷக்களை போல் ஏனைய தலைவர்களையும் மக்கள் விரட்டுவார்களென்று குறிப்பிட்டிருக்கின்றார். ராஜபக்ஷக்களை ஆதரித்த சிங்கள மக்களே, அவர்களுக்கு எதிராக வெகுண்டெழுந்தனர். கோட்டாபய ராஜபக்ஷவை தலையில் தூக்கிவைத்து கொண்டாடியவர்களே, அவரை, பின்கதவு வழியாக ஓடவைத்தனர். சிங்கள மக்கள் மத்தியில் அவ்வாறான வெகுசன திரட்சி அரசியல் இருக்கின்றது. ஒரு கட்டத்தில் வெளியில் வந்தார்களென்றால், நாட்டை கதிகலங்க வைப்பார்கள்.

கோட்டாபய ராஜபக்ஷ விடயத்தில் சிங்கள மக்கள் அதனை நிரூபித்திருக்கின்றனர். ஆனால் கடந்த 74 வருடங்களாக, சமஷ்டி பற்றி பேசி தமிழ் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்ற, கிடைக்கும் வாய்புக்களை பயன்படுத்தாது, தங்களது குடும்ப நலன்களை மட்டுமே முன்னுரிமைப்படுத்திக் கொண்டிருக்கின்ற தமிழ் அரசியல் தலைவர்கள் என்போரை யார் விரட்டியடிப்பது? அவர்களுக்கு எதிராக மக்கள் வெகுண்டெழ மாட்டார்களா? ராஜபக்ஷக்களை அதிகாரத்திற்கு கொண்டு வந்ததிலும், வீழ்த்தியதிலும் தமிழ் மக்களுக்கு தொடர்பில்லை.


ஆனால் தமிழ் மக்களால் தொடர்ந்தும் அரியணையில் அமர்த்தப்பட்டுக் கொண்டிருக்கும், போலிப் பெருமைகள் பேசும், காலாவதியாகிப ்போன பழசுகளை எப்போது தமிழ் மக்கள் விரட்டியடிப்பார்கள், எப்போது தமிழ்மக்கள், இளைய தலைமுறைக்கு வாய்ப்பை வழங்குவார்கள்?

இப்போது தமிழர்கள் சிந்திக்க வேண்டியது ராஜபக்ஷக்கள் பற்றியோ அல்லது ரணில் விக்கிரமசிங்கக்கள் பற்றியோ அல்ல -மாறாக, ஒவ்வொரு தேர்தல்களிலும் போலியான வாக்குறுதிகளை வழங்கும், நடைமுறைச் சாத்தியமான விடயங்களை புறம் தள்ளி, மக்களுக்கு போலியான நம்பிக்கைகளை ஊட்ட முயற்சிக்கும், தமிழ்அரசியல் தலைவர்களின் போலித்தனங்கள் பற்றியே, தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும்.

அரசியல் என்பது அடிப்படையில் சாத்தியங்களை கையாளும் கலையாகும். ஒவ்வொரு குறிப்பிட்ட சூழலில் அடையக் கூடிய விடயங்களை மட்டுமே அடையமுடியும். ஆனால் காலத்தை தவற விட்டு விட்டு, மற்றவர்கள் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் அரசியலையே தமிழ் அரசியல் தலைவர்கள் என்போர் முன்னெடுத்து வருகின்றனர். நிலைப்பாடுகளை கவர்ச்சிகரமாக முன்வைப்பவர்கள் அவற்றை அடைவதற்காக என்ன செய்கின்றார்கள்? ஐ.நா விற்கு தனித்தும் கூட்டாகவும் போட்டி போட்டுக் கொண்டு, கடிதம் அனுப்புதல், வெளிநாட்டு தூதரகங்கள் அழைத்தால் அங்கு சென்று தேனீர் அருந்துவது, வருடத்திற்கு ஒரு ஆர்ப்பாட்டம் அல்லது கறுப்புக்கொடி காட்டும் நிகழ்வுகளை செய்வது, இவற்றை தவிர, கொழும்பை கீழிறங்கிவருவதற்கு தமிழ் கட்சிகள் முன்னெடுத்த விடயங்கள் என்ன? இவ்வாறான விடயங்களை முன்னெடுப்பதற்கு கட்சிகள் தேவையில்லை. இதனை சிவில் சமூக குழுக்கள் என் போரே செய்து விட்டுப் போகலாமல்லவா.

கடந்த 13 வருடங்களில் தமிழ் தேசியத்தை பெயரில் வைத்திருந்த எந்தவொரு கட்சியும், விடயங்களில் முன்னேற்றங்களை காண்பிக்கவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பை தவறென்று நிரூபிப்பதற்காக பல வேறு கதைகளை புனைந்தவர்களும், கூட்டமைப்பிலிருந்து தாங்களை வேறுபடுத்திக் காண்பிப்பதற்கான அர்ப்பணிப்புக்களை இதுவரையில், காண்பிக்கவில்லை. வெறுமனே மற்றவர்களுக்கு முகவர், கைக்கூலிகளென்று பட்டம் சூட்டும் முயற்சிகளி. லேயே ஈடுபட்டனர். இந்த பின்புலத்தில் நோக்கினால், தமிழர்அரசியலில், பெரியளவிலான மாற்றங்கள் ஏற்பட வேண்டுமென்றால் அரசியல் பழசுகளை நோக்கி, தமிழ் மக்கள் ஆவேசமாக திரும்பினால் மட்டுமே மாற்றங்களை காணமுடியும்.

# 3வது ஆண்டு நினைவஞ்சலி



## திரு விசேந்தி அருளானந்தம்

யாழ்.சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த பலாலி ஆசிரியர் கலாசாலை முன்னாள் ஆசிரியர் திரு விசேந்தி அருளானந்தம் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாள் 11 மார்ச் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு விசேந்தி அருளானந்தம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# தமிழர்களின் நில அபகரிப்பு பிரச்சனைக்கு தீர்வு அவசியம்! மனித உரிமைகள் பேரவையில் பிரிட்டன் வலியுறுத்து!



இலங்கையின் தமிழர் பகுதியான வடக்கு, கிழக்கில் தொடரும் நில அபகரிப்பு பிரச்னைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும், போரில் இறந்தவர்களை நினைவு கூருவதற்கு அனுமதி வழங்கப் பட வேண்டும் என்று பிரித்தானியா வலியுறுத்தியுள்ளது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் மனித உரிமைகள் தொடர்பில் 42ஆவது மீளாய்வு நடக்கிறது. இதில் பிரித்தானியாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியான சைமன் மான்லி சி. எம்.ஜி. இந்த விடயத்தை வலியுறுத்தினார்.

2020 செப்ரெம்பரில் உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீண்டும் நிகழாமைக்கான உத்தரவாதங்கள் தொடர்பான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் பாப்லோ டிகிறீப், கொல்லப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளை நினைவுகூரும் நிகழ்வுகள் மீதான ஒடுக்குமுறையானது மீண்டும் மன உளைச்சல் மற்றும் அந்நியப்படுத்தலை உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஏனெனில் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் உறவுகளை - அனுபவங்களை நினைவு கூரும் வாய்ப்பை இது மறுக்கிறது. படையினரால் துன்புறுத்தப்படுவோம் என்ற அச்சத்தில் துக்கமடைந்த குடும்பங்கள், சீருடையில் இருக்கும் தங்கள் அன்புக்குரியவர்களின் புகைப் படங்களை புதைக்க அல்லது அழிக்க வேண்டிய அவசியம் குறித்து வெளிப் படுத்தியுள்ளார்.

உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூர, இலங்கை தனது அனைத்து சமூகங்களையும் சுதந்திரமாக அனுமதிக்க வேண்டும் என்று மான்லி குறிப்பிட்டுள்ளார். தொடர்ச்சியான அடக்குமுறைகள் கண்காணிப்புகள் இருப்பினும் போராட்டத்தில் உயிர் தியாகம் செய்தவர்களை நினைவு கூருவதற்காக வடக்கு கிழக்கு முழுவதும் தமிழர்கள் ஒன்றுகூடி வருகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தொல்பொருள் திணைக்களம் உள்ளிட்ட அரச திணைக்களங்கள் வடக்கு மற்றும் கிழக்கில் நில அபகரிப்பு செய்கின்றமை தொடர்பான கவலைகள் நிவர்த்திக்கப்பட வேண்டும்.

முல்லைத்தீவில் இராணுவம் 16ஆயிரத்து 910 ஏக்கருக்கும் அதிகமான பொது மற்றும் தனியார் காணிகளை இராணுவம் கையகப்படுத்தியுள்ளது. இந்த இடங்களில் குறைந்தபட்சம் 7 இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2021 மார்ச்சி ஒக்லாண்ட் இன்ஸ்ரிரியூட் வெளியிட்ட அறிக்கை, முல்லைத்தீவில் அளம்பில் தொடக்கம் கொக்கிளாய் வரையான 15 கி. மீற்றர் தூரத்தில் 5 கடற்படை தளங்கள் அமைந்துள்ளன என்று சுட்டிக்காட்டியுள்ளது.

வரலாற்று சின்னங்களை பாதுகாப்பதாகக் கூறி இராணுவம், தொல்பொருள் திணைக்களம் தமது தாயகத்தை தொடர்ந்து கைப்பற்றுவதற்கு எதிராக தமிழர்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர் என்றும் மான்லி வெளிப்படுத்தியுள்ளார்.

## ஐ.நா.மனித உரிமை பேரவையின் தீர்மானம்:- மீண்டும் நிராகரித்தது இலங்கை

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவை கடந்த வருடம் நிறைவேற்றிய தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என இலங்கை மீண்டும் தெரிவித்துள்ளது.

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் 52 அமர்வில் இடம் பெற்ற கூட்டமொன்றின் போது ஜெனீவாவில் உள்ள இலங்கையின் ஐநாவிற்கான அலுவலகத்தின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி ஹிமாலிஅருணதிலக இதனை தெரிவித்துள்ளார்.

மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்டவை போன்ற தீர்மானங்கள் இலங்கை மக்களிற்கு உதவியாக அமையப் போவதில்லை மாறாக நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்திற்கு அவை பாதிப்பை ஏற்படுத்தும் என அவர் தெரிவித்துள்ளார். ஐநாவின் உறுப்பு நாடுகளிடம் பற்றாக்குறையாக உள்ள வளங்களை வீணாக்கும் நடவடிக்கை இது என தெரிவித்துள்ள ஹிமாலி அருணதிலக இந்த வளங்களை வேறு நோக்கங்களிற்காக பயன்படுத்தலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.




தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring

(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# அரசியல் விவகாரங்களில் பௌத்த தேரர்களின் தலையீடுகளே இனப்பிரச்சனைக்கான தீர்வு கிடைக்காமைக்கு காரணம்- விக்கி



இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு அரசியல் விவகாரங்களில் பௌத்த தேரர்களால் மேற்கொள்ளப்படும் தலையீடுகளே காரணம் என்பதே எனது நிலைப்பாடாகும்.

வட, கிழக்கு வாழ் தமிழ்மக்களின் பிரச்சினைகள் என்னவென்பதைக் கண்டறிவதற்கு ஆங்கிலம் அல்லது தமிழ்மொழி பேசக்கூடிய பௌத்த தேரர்கள் தமிழ் தலைவர்களுடன் கலந்துரையாடுவது இன்றியமையாததாகும் என்று தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் யாழ்மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தக் கூடாது என வலியுறுத்தி மல்வத்து, அஸ்கிரிய, அமரபுர மற்றும் ராமாஞ்ஞ பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் கடந்த மாதம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கூட்டாகக் கடிதமொன்றைக் கையளித்திருந்தனர்.

அக்கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை மேற்கோள் காட்டி, அவற்றுக்கு விளக்கமளித்து இந்நான்கு மகாநாயக்க தேரர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தார்.

அக்கடிதத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தத விடயங்கள் சிங்கள சமூகத்தின் மத்தியில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும், எனவே மகாசங்கத்தினரை விமர்சிப்பது ஏற்புடையதா? என்றும் எழுப்பப்பட்டுள்ள கேள்விக்கு அளித்திருக்கும் பதிலிலேயே விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது

எனது கருத்துக்கள் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாக நான் கருதவில்லை. மாறாக அவை நேர்மறையான சூழ்நிலையொன்றையே தோற்றுவித்திருக்கின்றன. குறிப்பாக அரசியலில் பௌத்த தேரர்களின் வகிபாகத்தின் ஏற்புடைமை குறித்துப் பல சிங்கள பௌத்தர்கள் கேள்வியெழுப்ப ஆரம்பித்திருக்கின்றார்கள்.

இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு அரசியல் விவகாரங்களில் பௌத்த தேரர்களால் மேற்கொள்ளப்படும் தலையீடுகளே காரணம் என்பதே எனது நிலைப்பாடாகும்.

வட, கிழக்குவாழ் தமிழ்மக்களின் பிரச்சினைகள் என்னவென்பதைக் கண்டறிவதற்கு ஆங்கிலம் அல்லது தமிழ்மொழி பேசக்கூடிய பௌத்த தேரர்கள் தமிழ் தலைவர்களுடன் கலந்துரையாடுவது இன்றியமையாததாகும்.

போராட்டங்களில் ஈடுபடும் தேரர்களுக்கு அதிகாரப் பரவலாக்கத்துக்கும் அதிகாரப் பகிர்வுக்கும் இடையிலான வேறுபாடும் ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கும் கூட்டாட்சி அரசியலமைப்புக்கும் இடையிலான வித்தியாசமும் தெரியவில்லை. அது மாத்திரமன்றி அவர்களது தாய்மொழியின் வரலாறு கூட அவர்களுக்குத் தெரியாது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வில் குழப்பம் விளைவிக்க வேண்டிய தேவை அரசியல்வாதிக்கு இருக்குமாயின், அதற்குரிய உடனடி ஆதரவை பௌத்த தேரரிடமிருந்து இலகுவாகப் பெறமுடியும்.

'குறித்த நபர் நாட்டைப் பிளவுபடுத்த முற்படுகின்றார்' அல்லது 'குறித்த நபர் விடுதலைப்புலிகள் உறுப்பினர்' அல்லது 'குறித்த நபர் இந்தியாவின் கைப்பொம்மை' போன்ற விடயங்களை மாத்திரம் அவர்களிடம் கூறினால் போதுமானதாகும். உடனே அவர்கள் காவி உடையுடன் வீதிக்கு இறங்கி விடுவார்கள். அவர்கள் உண்மை நிலைவரத்தைப் புரிந்து கொள்ளாமல் 'சீன மத்தாப்பூ ' போன்று உடனடியாக வெடித்து விடுவார்கள் என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

# இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும்! ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வலிறுயுத்து!



இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வொல்கர் டர்க் வலியுறுத்தியுள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 52ஆவது கூட்டத்தொடர் கடந்த பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி ஆரம்பமானது. இம்முறை கூட்டத் தொடரின் நிகழ்ச்சி நிரலில் இலங்கை தொடர்பில் விசேட விவாதங்கள் எவையும் உள்ளடக்கப் படவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் பேரவையில் இலங்கை தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள ஆணையாளர் வொல்கர் டர்க் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கை முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடி மற்றும் கடன்சுமை என்பன சமூக, பொருளாதார உரிமைகளை அனுபவிப்பதற்கான நாட்டு மக்களின் இயலுமையில் தீவிர மட்டுப்பாடுகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

இதேவேளை இந்த நெருக்கடியிலிருந்து மீட்சியடைவதை இலக்காகக் கொண்ட கொள்கைகளில் சமத்துவமின்மை தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்படவேண்டும். இதே போன்று சமூகப் பாதுகாப்பு மற்றும் ஏனைய பொருளாதாரக் கூறுகளையும் மேம்படுத்தும் வகை யில் அமைய வேண்டும்.

மேலும், ஆட்சி நிர்வாகத்தில் நிலவும் ஊழல் மோசடிகள், வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்குவதுடன் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அந்தக் கொள்கைகள் பங்களிப்புச் செய்ய வேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படுவதுடன் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் மீதான ஒடுக்குமுறைகள், கண்காணிப்புக்கள் என்பன முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

அத்தோடு 'நிலைமாறுகால நீதியை அடைந்து கொள்வதை முன்னிறுத்தி மேற்கொள்ளப்படும் செயல்திறன்மிக்க நடவடிக்கைகளுக்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு எமது அலுவலகம் தயாராக உள்ளது என வொல்கர் டர்க் குறிப்பிட்டார்.

இதேவேளை இலங்கையில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்ளில் ஈடுபடுபவர்களிற்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது குறித்து மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கிய நாடுகள் கரிசனை வெளியிட்டுள்ளன.

# கனடாவில் இருந்து பணம் பெற்று பனிப்புலத்தில் வாள்வெட்டு! ஒருவர் கைது!

கனடாவில் இருந்து 2 இலட்ச ரூபாய் பணம் பெற்றுக் கொண்டு பனிப்புலத்தில் தாக்குலை மேற் கொண்டார் எனும் குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் இளவாலை காவல்துறைப் பிரிவுக்கு உட்பட்ட பனிப்புலம் பகுதியில் கடந்த 26ஆம் திகதி காரில் சென்ற நபரை வழி மறித்த இருவர் அவர் மீது வாள் வெட்டு தாக்குலை மேற்கொண்ட பின்னர் காரினையும் அடித்து நொறுக்கி சேதப்படுத்தி விட்டு அவ்விடத்தில் இருந்து தப்பி சென்று இருந்தனர்.

சம்பவம் தொடர்பில் காவல்துறையினர் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், சங்கானை பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் விசாரணைகளை முன்னெடுத்த போது தானும் பனிப்புலம் பகுதியை சேர்ந்த மற்றுமொரு இளைஞனுமாக இணைந்தே தாக்குதல் மேற் கொண்டோம். குறித்த நபர் மீது தாக்குதலை மேற்கொள்ளுமாறு கனடாவில் இருந்து 2 இலட்ச ரூபாய் பணம் எமக்கு வழங்கப்பட்டது. அந்த பணத்தினை பெற்றுக்கொண்டே தாக்குதலை மேற் கொண்டோம் என தெரிவித்துள்ளார்.



அதேவேளை குறித்த தாக்குதல் சம்பவத்திற்கு பயன்படுத்தப் பட்ட மோட்டார் சைக்கிளை காவல்துறையினர் கைப்பற்றியுள்ளனர். அத்துடன் கைது செய்யப்பட்ட நபருடன் இணைந்து தாக்குதலை மேற்கொண்ட நபர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவரை கைது செய்வதற்கான நடவடிக்கையை காவல்துறையினர் முன்னெடுத்துள்ளனர்.

# வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் தொடர்பில் நிகழ் நிலை அருங்காட்சியகத்தை உருவாக்கும் முயற்சியில் சர்வதேச மன்னிப்புச்சபை




இலங்கை உள்ளடங்கலாக தெற்காசியப் பிராந்தியத்தில் இடம் பெற்ற வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்களை உள்ளடக்கிய நிகழ்நிலை அருங்காட்சியகமொன்றை உருவாக்குவதை முன்னிறுத்தி சர்வதேச மன்னிப்புச்சபை செயற்பட்டு வருகின்றது.

இலங்கையைப் பொறுத்த மட்டில் உள்நாட்டு யுத்தம் இடம் பெற்ற காலப் பகுதியிலும், அதற்கு முன்னரான இனக் கலவரங்களின ' போதும் பெருமளவானோர் வலிந்து காணாமலாக்கப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச கட்டமைப்புக்கள் மற்றும் உள்நாட்டில் நிறுவப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்களின் அறிக்கைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின் போது வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை வெளிப்படுத்துமாறும், நீதியை நிலைநாட்டுமாறும் வலியுறுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்றுடன் 2204 ஆவது நாளாகவும் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே தெற்காசியப்பிராந்திய நாடுகளில் இவ்விவகாரம் தொடர்பில் பணியாற்றி வரும் அரச சார்பற்ற அமைப்புக்களுடன் இணைந்து, இயலுமானவரையில் தெற்காசியப்பிராந்தியத்தில் இடம் பெற்ற அனைத்து வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்களையும் உள்ளடக்கிய நிகழ்நிலை அருங்காட்சியகமொன்றை உருவாக்குவதற்கு சர்வதேச மன்னிப்புச் சபை திட்டமிட்டுள்ளது. இச்செயற்திட்டத்திற்கான ஒத்துழைப்பை வழங்க முன்வருமாறு இலங்கையைத் தளமாகக் கொண்டியங்கும் சில அரச சார்பற்ற அமைப்புக்களிடம் சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம்,இரா. சாணக்கியன் ஆகியோர் பிரித்தானியாவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் சாரா ஹெல்டனைச் சந்தித்துக்கலந்துரையாடினர். இந்த சந்திப்பில் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சின் இலங்கைக்கு பொறுப்பான அதிகாரியான மாயா சிவஞானமும் பங்கேற்றிருந்தார்.

திருகோணமலையில் உள்ள தனியார் விடுதியில் இந்த சந்திப்பு நடைபெற்றது. இதன்போது, நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமைகள், தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வு மற்றும் உள்ளூராட்சித் தேர்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டன. விரிவாகக் கலந்துரையாடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.


# இலங்கைக்கு 2 ஆண்டுகளுக்காக ஒன்றரை பில்லியனை வழங்க உலக வங்கி இணக்கம்

இலங்கைக்கு அடுத்த இரண்டு ஆண்டுகளுக்காக ஒன்றரை பில்லியன் டொலர்களை வழங்குவதற்கு உலக வங்கியின் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க மற்றும் உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கிடையில் கடந்த வாரம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியத்திற்கான உப தலைவர் மார்டின் ரைஸர் உள்ளிட்ட குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடியதன் பின்னர் , பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க உள்ளிட்டோரையும் சந்தித்து இந்த இணக்கப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதி கிடைத்தவுடன் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு இந்தப் பணம் ஒதுக்கப்பட்டு




அதன் முதல் பாகம் உடனடியாக வழங்கப்படும் என உலக வங்கியின் பிரதிநிதிகள் இதன் போது உறுதியளித்துள்ளனர். நிதி ஒழுக்கத்தை நிலைநாட்ட அரசாங்கம் மேற் கொண்டு வரும் முயற்சிகள் குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ள உலக வங்கியின் பிரதிநிதிகள், இந்த பணிகளை தொடர தேவையான தொழிநுட்ப ஆதரவை வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


## கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# தேர்தலை மீண்டும் தள்ளிப் போட ரணில் கையாளும் உபாயங்கள்!

கட்டுரையாளர்:
ஈழநாட்டிற்காக
யாழ்ப்பாணத்தில் இருந்து
– பார்த்தீபன் –

மார்ச் 9 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டு பின்னர் ஒத்தி வைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை ஏப்ரல் 25ஆம் திகதி நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்திருக்கின்றது. ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட திகதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியவில்லை என்றால், அதனை குறிப்பிட்ட திகதியிலிருந்து 21 நாள்களுக்குள் நடத்தி முடித்து விட வேண்டும். அதனால் தான் மார்ச் இறுதியில் இத் தேர்தல் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. எதிர்க்கட்சிகளும் அதற்கான அழுத்தத்தைக் கொடுத்தன. ஆனால், இதனை ஏப்ரல் இறுதி வரையில் ஒத்தி வைத்திருப்பதும் சந்தேகங்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஏப்ரல் 25 ஆம் திகதியிலாவது தேர்தல் நடைபெறுமா என்ற கேள்வியை எழுப்பக் கூடிய பல சம்பவங்களும் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. நீண்ட நாள்களுக்கு தேர்தலை ஒத்தி வைப்பது, தேர்தலை தவிர்ப்பதற்கான வாய்ப்புக்களை அரசாங்கத்துக்குக் கொடுத்து விடலாம் என்பதால் தான் அதனை உடனடியாக நடத்தி விட வேண்டும் என எதிர்க்கட்சிகள் அழுத்தம் கொடுத்தன.

ஆரம்பத்திலிருந்தே இந்தத் தேர்தலை இந்த நேரத்தில் நடத்த அரசாங்கம் விரும்பவில்லை. தற்போதைய நிலையில், உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது எதிர்க்கட்சிகளின் வெற்றிக்குத் தான் வழி வகுக்கும் என்பது ரணில் – ராஜபக்ஷ கூட்டணிக்குத் தெரியும். அதனால்தான் இதனை ஒத்திவைப்பதற்கு 22 தடவைகள் அரசாங்கம் முயன்றதாக சொல்லப்படுகின்றது.

தேர்ல்கள் ஆணைக்குழு சுயாதீனமாகச் செயற்படுவதாகச் சொல்லப்பட்டாலும் கூட, அரசின் விருப்பப்படி தேர்தல் நடத்தப்படுவதைத் தள்ளிப் போடுவதில் தான் அது அக்கறையாக இருந்தது. இறுதியில் அதில் வெற்றியும் பெற்றது.

அதாவது, திறைசேரியின் செயலாளர் தான் இதற்கான முதலாவது அடியை எடுத்து வைத்தார். வாக்குச் சீட்டை அச்சடிக்க பணத்தை விடுவிக்க அவர் மறுத்தார். பணம் கிடைக்கா விட்டால், வாக்குச் சீட்டை அச்சிட முடியாது என அரசாங்க அச்சகமும் அறிவித்தது. இறுதியில் தேர்தலும் ஒத்தி வைக்கப்பட்டது. இல்லையெனில் மார்ச் 9ல் தேர்தல் நடைபெற்று முடிந்திருக்க வேண்டும்.

புதிய தேர்தல் 21 நாட்களுக்குள் நடத்தப்பட வேண்டும். இதனை நீண்ட காலத்துக்கு ஒத்தி வைத்தால் அதனைப் பயன்படுத்தி தேர்தலை ரத்துச் செய்வதற்கான உபாயங்களை அரசாங்கம் செய்து விடும் என்ற அச்சம் எதிர்க்கட்சிகளுக்கு இருந்தது. அதனால் தான், விரைவாக 21 நாட்களுக்குள் தேர்தலை நடத்திவிட வேண்டும் என்ற அழுத்தம் எதிர்க்கட்சிகளால் கொடுக்கப்பட்டது.

இந்த நிலையில் புதிய தேர்தல் திகதியைத் தீர்மானிப்பதற்காக செவ்வாய்கிழமை கூடிய தேர்தல் ஆணைக்குழு, ஏப்ரல் 25 ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்குத் தீர்மானித்திருக்கின்றது. இந்த முடிவு கூட அரசாங்கத்துக்கு சார்பான ஒரு முடிவா என்ற சந்தேகம் எழுப்பப்படுகின்றது. மார்ச் மாதத்திலேயே தேர்தலை நடத்துவதானால், அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு போதிய கால அவகாசம் இல்லை என்பது காரணமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் தான் இந்தக் காரணத்தைக் கூறியிருக்கின்றார்.

புதிய தேர்தல் திகதியை முடிவு செய்வதற்காக மார்ச் 3ஆம் திகதி தான் முதலில் ஆணைக்குழு கூடியது. அன்றைய தினமே தேர்தல் குறித்த உயர் நீதிமன்றத்தின் உத்தரவும் வந்தது. தேர்தலுக்கான நிதியை யாரும் தடுக்கக் கூடாது என்று அந்த உத்தரவில் நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

நீதிமன்ற உத்தரவு வருவதற்கு முன்பாகவே தேர்தலை எப்போது நடத்துவது என்பது தொடர்பில் ஆணைக்குழு ஒரு முடிவுக்கு வந்து விட்டது. நீதிமன்ற உத்தரவு வந்ததால் அந்த முடிவை அறிவிப்பதை ஆணைக்குழு ஒத்தி வைத்தது.



திறைசேரி செயலர், அரச அச்சகப் பணிப்பாளர், பொலிஸ் மா அதிபர் ஆகியோருடன் கலந்துரையாடி விட்டு திகதி முடிவு செய்யப்படும் என்று அறிவித்தது. அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையானால் தான், வரக்கூடிய பிரச்சினைகளைத் தவிர்க்கலாம் என்பது திட்டம். இதற்கான கூட்டம் செவ்வாய் கிழமை நடை பெற்றது. ஏப்ரல் 25 ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கான அங்கீகாரத்தைப் பெறுவது தான் இந்தக் கூட்டத்தின் நோக்கம்.

ஆனால், ஆணைக்குழு அழைப்பு விடுத்தபடி கூட்டத்திற்கு திறைசேரிச் செயலாளர் வரவில்லை. தன்னால் வர முடியாது என்று ஆணைக்குழுவிற் – குக் கடிதம் அனுப்பியிருந்தார் அவர். தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்திற்கு அதே நேரத்தில் அவர் அழைக்கப்பட்டிருந்தார். இதனால், தேர்தலுக்குத் தேவையான நிதி விடுவிக்கப்படும் என்கிற எந்த உத்தரவாதமும் திறைசேரிச் செயலாளரிடம் இருந்து கிடைக்காமலேயே புதிய தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

திறைசேரிச் செயலாளர் தேர்ல் ஆணைக்குழுவின் கூட்டத்துக்குச் சென்றிருந்தால், நிதி தொடர்பான உத்தரவாதம் அவரிடமிருந்து பெறப்பட்டிருக்கும். ஆனால், அவரை அங்கு செல்லாமல் தடுப்பதற்காகவே பாதுகாப்புச் சபைக் கூட்டத்துக்கு அவர் அழைக்கப்பட்டாரா என்ற கேள்வி எதிர்க்கட்சிகளால் எழுப்பப்பட்டிருக்கின்றது.

அதேவேளையில் தேர்தலுக்குத் தேவையான நிதி விடுவிக்கப்படும் என்ற உத்தரவாதத்தை அவர் இதுவரையில் பகிரங்கமாக வெளியிடவில்லை.

செவ்வாய்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்துக்கு சமூகமளித்து முக்கியமான உரை ஒன்றையும் நிகழ்த்தினார். நாட்டின் பொருளாதார நிலை, சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி என்பன தொடர்பாக அவர் உரையாற்றினார். இதனால், ஜனாதிபதி இல்லாமலேயே பாதுகாப்புச் சபையின் கூட்டம் நடைபெற்றதா என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியிருந்தமையும் கவனிக்கத்தக்கது. சஜித் பிரேமதாஸ தனது நாடாளுமன்ற உரையில் பின்வரும் விடயங்களைத் தெரிவித்திருந்தார்.

இந்நாட்டிலுள்ள பெரும்பான்மையான உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களின் பதவிக் காலம் இவ்வருடம் மார்ச் மாதத்துடன் நிறைவடையவுள்ள போதிலும், தற்போதைய அரசாங்கத்தின் மீது மக்கள் கொண்டுள்ள அதிருப்தியை மூடி மறைக்க அரசாங்கம் தொடர்ந்தும் தேர்தலை ஒத்திவைக்க கடுமையாக முயற்சித்து வருகின்றது. தேர்தலை

நடத்தாமல் தடுக்க இதுவரை சுமார் 22 விதமான கூட்டு சதிகளை அரசாங்கம் கையாண்டுள்ளதாக ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளன. அந்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்த நிலையில், தேர்தலை நடத்துவதற்கு நிதியை வழங்காமல் இருப்பது தான் அரசாங்கத்தின் கடைசி முயற்சியாக தெரிவதோடு, இது ஜனநாயகத்தை நசுக்கும் விடயமாகவும் அமைந்துள்ளது.



அத்துடன் நிதி அமைச்சின் செயலாளரை கலந்துரையாடுவதற்கு தேர்தல் ஆணைக்குழு காலை அழைத்திருந்தது. ஆனால் தேசிய பாதுகாப்பு பேரவையில் சந்திப்பொன்று இருப்பதாக தெரிவித்து, தேர்தல் ஆணைக்குழுவுடனான கலந்தரையாடலை புறக்கணித்திருக்கிறார். அவ்வாறானதொரு பாதுகாப்பு பேரவை கூட்டம் இடம் பெற்றதாக தெரியவில்லை.

ஏனெனில் ஜனாதிபதி, பிரதமர். பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் என அனைவரும் சபையில் இருக்கும் போது எவ்வாறு தேசிய பாதுகாப்புச் சபையின் கூட்டத்தை நடத்துவது?'' என்று கேள்வி எழுப்பியுள்ள சஜித் பிரேமதாஸ, நிதி அமைச்சின் செயலாளரை தேர்தல் ஆணைக்குழுவுடனான கலந்தரையாடலுக்கு அனுப்பாமல் தடுப்பதற்கே தேசிய பாதுகாப்பு பேரவை கூட்டம் இடம் பெறுவதாக பொய் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டையும் முன்வைத்திருக்கின்றார்.

சஜித்தின் குற்றச்சாட்டில் எந்தளவுக்கு உண்மை இருந்தாலும், அரசாங்கம் இவ்விடயத்தில் தேர்தலை மீண்டும் தள்ளிப் போடும் நோக்கத்துடன் நுணுக்கமாக காய்நகர்த்துவதாகவே எதிரணிகள் சந்தேகப்படுகின்றன.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முறையை சீர்திருத்தப் போவதாகவும், உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்கப் போவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மைக் காலமாகச் சொல்லி வருகின்றார். இதற்கான நகர்களை முன்னெடுப்பதன் மூலமாக உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை காலவரையறையின்றி பின்போட முடியும் என ரணில் சிந்திப்பதாகவும் ஒரு தகவல் உள்ளது. நல்லாட்சி எனப்படும் மைத்திரி ரணில் ஆட்சிக் காலத்தில் தான் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டன. மாகாண சபைத் தேர்தல் சீர்திருத்தம் என்று பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தே அந்தத் தேர்தல்களையும் அப்போதைய அரசு ஒத்தி வைத்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அப்போது அதற்கு உதவியது. மாகாண சபைகளின் பதவிக்காலம் முடிவுக்கு வந்து வருடங்கள் சென்று கொண்டிருக்கின்ற போதிலும், அதனை நடத்த முடியாமலிருப்பதற்குக் காரணம் அது தான்.

இப்போது அதே போன்ற ஒரு உத்தியை தனது இறுதி ஆயுதமாக ரணில் பயன்படுத்தி உள்ளூராட்சித் தேர்தல்களையும் கிடப்பில் போட்டுவிடலாம் என்ற அச்சம் எதிரணி தரப்பில் உள்ளது.

ஆனால், இதற்கு எதிராக பாரிய போராட்டங்களை நடத்தக்கூடிய வல்லமையுடன் எதிர்க்கட்சிகள் உள்ளனவா என்பதும் கேள்விக்குறியாகத் தான் உள்ளது. பெற்றோல், டீசல், எரிவாயு தட்டுப்பாடு நீக்கப்பட்டிருக்கின்றது. டொலரின் பெறுமதி குறைவதால் இறக்குமதி செய்யப்படும் மா, சீனி, பருப்பு போன்றவற்றின் விலைகள் குறைவடைந்திருக்கின்றது.

இதனால், மக்கள் பெருமெடுப்பில் வீதியில் இறங்க மாட்டார்கள் என்று அரசாங்கம் நம்புகின்றது.

அதே வேளையில் மறு பக்கத்தில் எதிர்க்கட்சிகள், போராட்டக் காரர்களை பலவீனப்படுத்தும் உபாயங்களையும் ரணில் கையாள்கின்றார். இந்த நிலையில், அடுத்த கட்டம் எவ்வாறு அமையப் போகின்றது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்!

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும்.

ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

04 மார்ச் 2023 முதல் 10 மார்ச் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

### மேலதிக விபரங்களுக்கு:-

### ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி துஷியந்தி நவநாதன்

யாழ்.கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 08 மார்ச் 2023 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, பாரதி, செஞ்சோலை ஆகிய மூன்று இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 35வது ஆண்டு நினைவஞ்சலி



### சங்கீதபூஷணம் - இசை ஆசிரியர்

### அமரர் திரு நாகலிங்கம் சண்முகலிங்கம்

புங்குடுதீவைச் சேர்ந்த சங்கீதபூஷணம், இசை ஆசிரியர் திரு நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களது 35வது ஆண்டு நினைவு நாள் 11 மார்ச் 023 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பொன்னம்மா ஐயாத்துரை

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பொன்னம்மா ஐயாத்துரை அவர்களின் ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 18 மார்ச் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். திருமதி பொன்னம்மா ஐயாத்துரை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சிவனாட்சி கணபதி

கொழும்பு முகத்துவாரத்தைச் சேர்ந்த திருமதி சிவனாட்சி கணபதி அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு நாள் 14 மார்ச் 2023 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். திருமதி சிவனாட்சி கணபதி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைஞ்சலி



### திருமதி சரஸ்வதி சிவசங்கரப்பிள்ளை

சங்கானை தொட்டிலடியைப் பிறப்பிடமாகவும் மிஸிசாகா கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சரஸ்வதி சிவசங்கரப்பிள்ளை அவர்களின் 31ம்நாள் நினைவு தினம் 08 மார்ச் 2023 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சரஸ்வதி சிவசங்கரப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 24வது ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி மார்க்கண்டு மனோன்மணி

### திரு செல்லர் மார்க்கண்டு



யாழ்ப்பாணம் சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி மார்க்கண்டு மனோன்மணி அவர் களது 24வது ஆண்டு நினைவு நாள் 10 மார்ச் 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் தந்தையார் திரு செல்லர் மார்க்கண்டு அவர்களது நினைவையும் சேர்த்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். தாய், தந்தையரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



05 மார்ச் 2023 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு கந்தையா தம்பிராஜா (ஐயப்பன் குருசுவாமி) அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு கந்தையா தம்பிராஜா அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



06 மார்ச் 2023 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வன் நிருஷன் தாசன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் நிருஷன் தாசன் அவர்கள் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




08 மார்ச் 2023 புதன் கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சிவகுப்தா ஜெயகௌரி தம்பதிகளின் செல்வப்புதல்வி சியாமி சிவகுப்தா அவர்களின் 23வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி சியாமி சிவகுப்தா அவர்கள் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்க் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்.



08 மார்ச் 2023 புதன்கிழமை சங்கானை தொட்டிலடியைப் பிறப்பிடமாகவும் மிஸிசாகா கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சரஸ்வதி சிவசங்கரப்பிள்ளை அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



08 மார்ச் 2023 புதன்கிழமை கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி நவநாதன் துஷியந்தி அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



08 மார்ச் 2023 புதன்கிழமை கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி நவநாதன் துஷியந்தி அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




# நூற்றாண்டு விழா காணும் வேலணையின் வாழும் வரலாறு திரு இராஜலிங்கம்

வேலணை ஏழாம் வட்டாரத்தில் பிறந்து ஒன்பதாம் வட்டாரத்தில் வசித்துத் தற்போது கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் வேலணையின் வாழும் வரலாறு திரு சண்முகம் இராஜலிங்கம் அவர்களுக்கு இன்று (10-03-2023) வெள்ளிக்கிழமை நூறாவது பிறந்த நாள். சதமடித்து வாழ்ந்து வரும் என் அன்பிற்கினியவரை பெருமை பொங்க நெஞ்சாரப் போற்றுகின்றேன். அவர் நீடூழி வாழ்கவென வாழ்த்தி வணங்குகின்றேன். இவரது நீண்ட நெடிய வாழ்க்கைப் பாதையில் இவர் பதித்த தடங்கள் பசுமையாகப் பரவிக் கிடக்கின்றன. தனித்த புகழ் தனிப் பெரும் அடையாளம் ஆகியவற்றைச் சுமந்து நிற்கும் இவரது சிறப்புகள் பலவுண்டு ஆயினும் நானறிந்த சிலவற்றைக் கூற விழைகின்றேன். வென்றாரும் வெல்வாரும் இல்லாது ஒளிவீசும் பல்பரிமாணம் மிக்க ஆளுமையைத் தன் சுயமுயற்சியால் அடைந்த வீரர் இவர் என்றால் அது மிகையல்ல.

இவர் பிறந்த இடம் சிற்பனை முருகமூர்த்தி கோயிலின் தென்மேற்குப் பக்கம். எனது வீட்டிலிருந்து கூப்பிடு தொலைவு. இவரது தந்தை பெயர் சண்முகம் தாயார் பெயர் தெய்வானை. அக்காவும் தம்பியுமாகச் சகோதரர்கள் இருவர். இவருக்கும் எனக்கும் ஓர் ஒற்றுமை. உண்டு இருவரும் சைவ சித்தாந்தப் பண்டிதர் காலஞ்சென்ற கந்தையா சிவகடாட்சம் ஆசிரியரின் மாணவர்கள். இவரது மனைவி திருமதி இராசாம்பிகை இராஜலிங்கம் அவர்கள் எனது ஆசிரியை. வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் முதலாம் ஆண்டில் எனது இரண்டாந் தவணை வகுப்பாசிரியர். இவர் வேலணையில் வாழ்ந்த வீடு வேலணை மத்திய கல்லூரி ஆண்கள் விடுதிக்கு அருகாமையிலிருந்த டேவிட் மாஸ்ரர் வீடு என்று அழைக்கப்பட்ட வீடாகும். சிறுவயது முதல் கடும் முயற்சியாளர். கணக்கியலில் வல்லுனர். வேலணைக் கிராமசபைத் தலைவராகவிருந்த பண்டிதமணி இராமநாதர் மருதையனார் அவர்கள் இவரது நம்பிக்கைக்குரிய ஆலோசகர்.



தீவகத்தின் பெரும் செல்வந்தர்களில் ஒருவராக இருந்த சுருவிலைச் சேர்ந்த திரு கோபாலபிள்ளை அவர்கள் பண்டாரவளையில் புகழ்பூத்த வர்த்தகராக இருந்ததோடு பண்டாரவளை நகரசபைத் தலைவராகவும் இருந்தவர். 1954இல் இரண்டாவது எலிசபெத் மகாராணியாரின் இலங்கை விஜயத்தின் போது மகாராணியார் பண்டாரவளைக்கும் சென்றிருந்தார். அப்போது அவரை நகரசபையின் சார்பில் வரவேற்றவர் திரு கோபாலபிள்ளை அவர்கள் என்ற வரலாற்று உண்மையை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். திரு இராஜலிங்கம் அவர்கள் நீண்ட காலமாக திரு கோபாலபிள்ளை அவர்களுக்கு நம்பிக்கைக்குரிய உதவியாளராகவும் அவரது வர்த்தக நிறுவனங்களின் கணக்கப்பிள்ளையாகவும் செயற்பட்டார்.

நான் இவரது ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் தொலைபேசியில் வாழ்த்துவது வழக்கம். அவரது 95 ஆவது பிறந்த நாள் விழாவில் நேரடியாகக் கலந்து வாழ்த்துத் தெரிவித்தேன். பொதுவாக வயது முதிர்ச்சியடையும் போது உடல் உறுப்புகள் அனைத்தும் செயலிழந்து கொண்டே வரும். ஆனால் இவரைப் பொறுத்த வரையில் இவரது ஞாபகசக்தி அபாரம். தனது முயற்சியால் தமிழை நன்கு கற்றவர். எழுத்தாற்றல் மிக்கவர். ஆரிய நூல்களைப் படித்தவர் தொடர்ந்தும் படித்துக் கொண்டிருப்பவர். தனது அன்பு மனையாளின் நினைவுமலருக்கு 20 பக்கங்கள் கொண்ட கட்டுரையை எழுதி தமது இல்லற வாழ்வின் சாதனைகளை ஆவணமாக்கியவர்.




கொழும்புத் தமிழ் சங்கத்தால் வெளியிடப்பட்ட பண்டிதமணி மருதையனார் வரலாற்று ஆவணத்திற்குக் காத்திரமான வரலாற்றுக் கட்டுரையை எழுதிய பெருமைக்குரியவர். ஓய்வுபெற்ற நீதிபதி திருமதி சரோஜினிதேவி இளங்கோவன் பற்றி எழுதிய போது வேலணையின் நெல்லாவில் என்ற பகுதி பற்றியும் அந்தக் காலத்துத் திண்ணைக் கல்வி பற்றியும் எழுதி மறக்கப்பட்ட வரலாற்றை நினைவுகூர்ந்த ஊர்ப்பாற்றாளர். இத்தனை பெருமைகளைக் கொண்ட வரும் எனது நலன்விரும்பியுமான திரு இராஜலிங்கம் அவர்கள் மன நிம்மதியோடும் உடல் ஆரோக்கியத்தோடும் ஆண்டுகள் பல நீண்டு வாழ வேண்டும் என்று வாழ்த்தி வணங்கி நிறைவு செய்கின்றேன்.

சி. இளஞ்செழியன்
பழைய மாணவர் (1975-1982)
வேலணை மத்திய கல்லூரி

# பூஷணி நுண்கலை பீடம் வழங்கிய நீதன் முருகன் பாடல் வெளியீட்டு விழா







கனடாவில் முன்னணி தபேலா வாத்தியக் கலைஞராகத் திகழும் திரு நவநீதன் கனகசபாபதி அவர்களது பூஷணி நுண்கலைப் பீடம் கடந்த 05 மார்ச் 2023 ஞாயிற்றுக்கிழமை கனடா கந்தசுவாமி கோவில் கலாச்சார மண்டபத்தில் நீதன் முருகன் பாடல் வெளியீட்டு விழா ஒன்றினை மிகச் சிறப்பாக நடத்தியது. கனடா கந்தசுவாமி ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் திரு முத்து அவர்களது வாழ்த்துரையுடன் விழா ஆரம்பமானது. விழாவினை திரு ராகவன் அவர்கள் தொகுத்து வழங்கினார். நயினாதீவு கனேடியர் அபிவிருத்திச் சங்கம் விருது வழங்கியும் பொன்னாடை போர்த்தியும் தமது ஊரின் மைந்தனைப் பாராட்டியது கவனிக்கத்தக்கது.





# ஒரு சிப்பாய் கண்ட கனவு

புத்த பகவான் ராஜபோகங்களையும் குடும்பத்தையும் துறந்து சன்னியாசி ஆகியவர்.ஆனால் அவர் இலங்கைத் தீவில் நிலாவரையில் ராணுவ முகாமில் உள்ள ஒரு சிப்பாயின் கனவில் தோன்றி தனது சிலையை நிலாவரையில் வைக்குமாறு கூறியதாக அந்த சிப்பாய் கடந்த கிழமை கூறியுள்ளார். ரவுப் ஹக்கீம் முன்பொருமுறை கூறியது போல நாட்டில் புத்தர் சிலைகள் எல்லைக் கற்களாக மாற்றப்பட்டு விட்டன.

அந்தச் சிப்பாய் நிலாவரையில் யாருக்காக நிலத்தை பாதுகாக்கின்றாரோ, அந்த மக்கள் மத்தியில் உள்ள மூளைசாலிகள் நாட்டை விட்டு வெளி யேறிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை அவ்வாறு வெளியேற வேண்டாம் என்று நாட்டின் ஜனாதிபதி மன்றாடிக் கொண்டிருக்கிறார். யாருடைய நிலத்தை யாரிடமிருந்து பாதுகாப்பதற்காக அந்த சிப்பாய் நிலாவரையில் குந்திக் கொண்டிருக்கிறார்?

இலங்கைத்தீவின் மொத்த படைத் தொகையில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பகுதி தமிழ்ப் பகுதிகளில் நிலை கொண்டிருப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. மிகச் சிறிய இலங்கைத்தீவு தனது அளவுப் பிரமாணத்திற்கு அதிகமாக படையினரைக் கொண்டிருக்கிறது. இப்படையில் மூன்றில் இரண்டு பகுதி வடக்கு கிழக்கை படை மயப்படுத்த நிறுத்தப்பட்டிருக்கிறது என்று ஒரு புள்ளிவிபரம் உண்டு.

நாட்டின் பொதுத்துறை ஊதியத்தில் சுமார் 50 வீதம் படைத்தரப்புக்கு வழங்கப்படுகிறது என்றும், உலகில் 100 பேர்களுக்கு எத்தனை படை வீரர்கள் என்ற விகிதத்தில் இலங்கை பத்தாவது இடத்தில் உள்ளது என்றும் நிஷான் டி மெல்– வெரிற்றே ரிசேர்ச் இன்ஸ்ரிரியூ ட்டின் பணிப்பாளர்–கூறுகிறார். இலங்கைத்தீவின் பாதுகாப்புச் செலவினம் நாட்டின் கல்வி மற்றும் சுகாதாரச் செலவினங்கள் இரண்டையும் கூட்டிவரும் தொகையைவிட அதிகமாக இருப்பதும் பொருளாதார சீரழிவுக்கு ஒரு காரணம் என்று நிஷான் கூறுகிறார்.

சிறிய இலங்கைத் தீவு பாகிஸ்தானைப் போலவே தனது பருமனை விடப் பெரிய படைக்கட்டுமானத்தைக் கொண்டிருக்கிறது. பாகிஸ்தானிலும் இப்பொழுது பொருளாதார நெருக்கடி. சில நாட்களுக்கு முன் பாகிஸ்தானிய ஊடகங்களில் வந்த செய்திகளின்படி, அங்கு படையினருக்கு ஒதுக்கப்பட்ட சிறப்பு நிதி குறைக்கப் பட்டதால், அங்கே படையினருக்குச் மூன்று வேளையும் சாப்பாடு போடக் காசில்லை என்று கூறப்படுகிறது.

ஆனால் இலங்கைத்தீவில் 13ஆவது திருத்தத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யும் பிக்குகளுக்கு மூன்று வேளையும் சாப்பாடு கிடைக்கிறது. நிலாவாரையில் கனவுகண்ட சிப்பாய்கும் மூன்று வேளை சாப்பாடு கிடைக்கிறது .

நாட்டின் பெருமளவு செல்வத்தையும் தலைப்பேறானவற்றையும் அனுபவிக்கும் படைக்கட்டமைப்பின் ஆட்தொகையைக் குறைத்தாலே போதும் நாட்டின் செல்வத்தில் பெரும் பகுதியை மிச்சப்படுத்தலாம். அவ்வாறு படைதரப்பில் ஆட்குறைப்பை செய்ய வேண்டும் என்பது ஐ.எம்.எஃப்பின் நிபந்தனைகளில் ஒன்று என்று முன்பு கூறப்பட்டது. ஆனால் அண்மையில் கண்டியில் உரையாற்றிய பொழுது ஜனாதிபதி ஐ.எம்.எஃப் விதித்த 15 நிபந்தனைகளை நிறைவேற்றியது பற்றிப் பேசியிருக்கிறார். ஆனால் அதில் படை ஆட்குறைப்பு தொடர்பாக எதுவும் பேசவில்லை.சிங்கள பௌத்த பெருந்தேசியவாத அரசியலில் படை ஆட்களின் எண்ணிக்கையை குறைக்க முற்படுவது அரசியல் தற்கொலைக்கு நிகரானது என்பது ரணிலுக்கு தெரியும். அதனால் அவர் அதனை அடக்கி வாசிக்கின்றாரா, அல்லது 13–வது திருத்தத்தை எதிர்த்து வீதியில் இறங்கியது போல படை ஆட்குறைப்பைச் செய்தால் அதற்கும் எதிராகவும் பிக்குகளும் எதிர்க்கட்சிகளும் வீதியில் இறங்க



லாம் என்ற ஒரு சாட்டைக் கூறி அந்த விவகாரத்தை ஒத்திவைத்து வருகிறாரா?

ஆனால் படையினரை ஆட்குறைக்காமல் தமிழ்ப் பகுதிகளை இராணுவ மயநீக்கம் செய்ய முடியாது. எனவே பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை அரசாங்கத்தை பிணையெடுக்க முற்படும் ஐ.எம்.எஃப் போன்ற தரப்புகள் படை ஆட்குறைப்பை ஒரு நிபந்தனையாக முன் வைக்கவில்லையா? அதை ஒரு நிபந்தனையாக முன்வைக்கும்படி தமிழ்த் தரப்பு குறிப்பாக புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் மேற்கு நாடுகளை வற்புறுத்தவில்லையா? படையினரை ஆட்குறைக்காமல் பொருளாதாரத்தை நிமிர்த்த முடியுமா? படை ஆட்களின் எண்ணிக்கையை குறைக்காமல் ஐ.எம்.எஃப்பின் ஏனைய நிபந்தனைகளை நிறைவேற்றலாம் என்று அரசாங்கம் நம்புகின்றதா?

ஆனால் அரசாங்கம் ஐ.எம்.எஃப்பின் ஏனைய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்காக மானியங்களை வெட்டி உரத்தின் விலை மின்கட்டணம், வங்கி வட்டி விகிதம் போன்றவற்றை உயர்த்தியதனால் அடிமட்ட மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இன்னொருபுறம் அரசாங்கம் புதிதாக விதித்திருக்கும் வரியினால் படித்த நடுத்தர வர்க்கம் அதாவது நாட்டில் அதிக வருமானத்தை பெறும் வகுப்பினர் பதட்டமடையத் தொடங்கியுள்ளார்கள்.

உரமானியத்தை வெட்டியதனால் உரத்தின் விலை கூடியது.அதனால் விவசாயிகள் நெல்லின் விலையைக் கூட்டினார்கள். நெல்லை வாங்கி விற்கும் வியாபாரிகள் தங்களுடைய லாபத்தையும் சேர்த்து மேலும் விலையைக் கூட்டினார்கள்.

அதாவது மானிய வெட்டு, வரி உயர்வு, வங்கி வட்டி அதிகரிப்பு போன்றவற்றின் சுமைகள் அனைத்தும் சாதாரண மக்களின் தலைகளிலேயே சுமத்தப்படுகின்றன. அதனால் தான் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜே.வி.பி ஒழுங்குபடுத்திய ஆர்ப்பாட்டத்தில் பெருமெண்ணிக்கையான சிங்களமக்கள் பங்கு பற்றினார்கள். அது போலவே கடந்த புதன்கிழமை 40க்கும் குறையாத தொழிற்சங்கங்கள் இணைந்து தமது எதிர்ப்பை காட்டின. இது ஒருபுறம். இன்னொரு புறம் அரசாங்கம் விதித்திருக்கும் புதிய வரியினால் நாட்டின் படித்த மேல் நடுத்தர வர்க்கம் நாட்டை விட்டுத் தப்பியோடத் தொடங்கியுள்ளது.

கடந்த ஒரு வருடத்தில் மின்சார சபையின் 72 பொறியியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும் அவர்களில் 22 பேர் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் பணிபுரிவதாகவும் மின்சார சபையின் பொறியியலாளர் சங்கத்தின் இணைச் செயலாளர் இசுரு கஸ்தூரிரத்ன கூறியுள்ளார். நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தை வழமையாக நடத்துவதற்கு 123 பொறியியலாளர்கள் பணியாற்ற வேண்டும், ஆனால் இன்று 100 பேரே பணிபுரிவதாக அவர் சுட்டிக்காட்டியுளளார். மேலும் இந்த பொறியியலாளர்கள் பற்றாக்குறையால், வருங்காலத்தில் ஆலையை நிறுத்த வேண்டிய நிலைகூட ஏற்படலாம் என்றும், அப்படி நடந்தால், மின் நெருக்கடி கடுமையாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் சமில் விஜேசிங்க பின்வருமாறு கூறியுள்ளார் இந்த மாதத்தில் மாத்திரம் 50 முதல் 60 வரையிலான அரச வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். குறிப்பாக, சில வைத்தியர்கள் விடுமுறை பெறாமல் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இருப்பினும், நாட்டை விட்டு வெளியேறியுள்ள மருத்துவ நிபுணர்களின் பெயர் விபரங்களும் எண்ணிக்கையும் சுகாதார அமைச்சினால் இதுவரையில் வெளியிடப்படவில்லை. எமக்கு கிடைக்கப் பெற்றுள்ள தகவலுக்கு அமைவாக மொத்தமாக 1,000க்கும் மேற்பட்ட மருத்துவ நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன''...

அதேவேளை, கிராமமட்ட மற்றும் நகர்ப்புற வைத்தியசாலைகளில் வைத்தியர்களின் வெளியேற்றத்தால் வைத்தியசாலை நடவடிக்கைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. எனினும், கொழும்பு தேசிய வைத்தியசாலை, லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை மற்றும் மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை போன்றன இதுவரை மருத்துவ நிபுணர்களின் பற்றாக்குறையால் பாதிக்கப்

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



படவில்லை. மேலும், அங்கு விசேட வைத்திய நிபுணர்கள் வைத்தியசாலையில் காணப்பட்ட போதிலும், தாதியர்கள் மற்றும் ஏனைய சுகாதார ஊழியர்கள் வைத்தியசாலைகளை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் தொழில் நிமித்தம் சென்றுள்ளனர். அதேவேளை, அதிகளவிலான வைத்திய ஆலோசகர்களும் வைத்தியசாலைகளை விட்டு வெளியேறியுள்ளனர் என்று சமில் விஜேசிங்க கூறுகிறார்.

இவ்வாறு ஒருபுறம் மூளைசாலிகளும் படித்தவர்களும் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இன்னொருபுறம் அண்மையில், அமெரிக்க யுத்தவிமானங்கள் படை அதிகாரிகளோடு நாட்டுக்குள் வந்து போயுள்ளன. திருகோணமலையில் அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து ஒரு கூட்டுத்தளத்தை உருவாக்கப் போவதாக ஸ்ரீலங்கா கார்டியன் எனப்படும் இணைய இதழ் கடந்த மாதம் 14ஆம் திகதி ஒரு கட்டுரையைப் பிரசுரித்திருந்தது. ஏற்கனவே இந்திய பாதுகாப்புத் துறை ஆலோசகரும் உளவுத்துறையின் தலைவரும் ரகசியமாக இலங்கைக்கு வந்து போனதாக செய்திகள் கிடைத்தன.

பிச்சையெடுத்த போதிலும் இச் சிறிய தீவு அதன் கேந்திர முக்கியத்துவம் காரணமாக இப்பொழுதும் அதன் கவர்ச்சியை இழக்கவில்லை. அதனால் தான் பேரரசுகள் இச்சிறிய தீவைத் தேடி வருகின்றன. ஏற்கனவே சீனா அம்பாந்தோட்டையில் 99ஆண்டுகளுக்கு நிரந்தரமாக குந்தி விட்டது.

கொழும்புத் துறைமுகத்தில் ஒரு பட்டினத்தை கட்டியெழுப்பி விட்டது. சீன விரிவாக்கத்துக்கு எதிராக இந்தியா இலங்கையில் எங்கு தனது கால்களைப் பரப்பலாம் என்று தீவிரமாக உழைக்கின்றது.

வடக்கில் கடலட்டை ஒரு இராஜதந்திரப் பொருளாக மாறி விட்டது. இச்சிறிய தீவு பேரரசுகள் பங்கிடும் அப்பமாக எப்பொழுதோ மாறி விட்டது. ஒருபுறம் இச்சிறிய தீவைப் பேரரசுகள் தேடி வருகின்றன. இன்னொரு புறம் இச்சிறிய தீவின் படித்த மூளைசாலிகளோ நாட்டை விட்டுத் தப்பிச் செல்கிறார்கள். யாருடைய நிலத்தை யாரிடமிருந்து பாதுகாப்பதற்காக அந்த சிப்பாய் நிலாவரையில் முகாமிட்டிருந்து கனவு காண்கிறார்?

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# எதிராளி இல்லாத பா.ஜ.கட்சி! பயனற்ற ராகுலின் யாத்திரை!

**கட்டுரையாளர்: தமிழகத்தில் இருந்து**
**- பகவான் சிங் -**

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களான திரிபுரா, நாகாலாந்து மற்றும் மேகாலயாவில் அண்மையில் நடந்த தேர்தல்களில், ஒரு காலத்தில் கோலோச்சிக் கொண்டிருந்த காங்கிரஸ் கட்சியைச் சரிவில் தள்ளி, பா.ஜ. க. மிகச் சிறப்பாக செயல்பட்டுள்ள இந்தத் தருணத்தில், '2024 பாராளுமன்றத் தேர்தலுக்கு இந்தியா தயாராகிறது என்பது குறித்து நமது ஞாயிறு உரையாடல் இருப்பது இயல்பே.

வெகு எளிதாகத் தொடர்ந்து மூன்றாவது முறையாகப் பிரதமர் பதவியில் மோடி அமர்வார் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், அவரது போட்டியாளராகக் கருதப்படும் ராகுல் காந்தி தலைமையிலான எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சி, இந்திய ஜனநாயகத்தில் முன்னெப் போதும் இல்லாத அளவுக்கு, வீழ்ச்சி பெற்றுள்ளது. 12 மாநிலங்களை உள்ளடக்கிய, அவரது 4,000 கி. மீ. பாரத் 'ஜோடோ' (பாரத இணைப்பு) யாத்திரை எந்தப் பலனையும் அளிக்கவில்லை.

மூன்று வடகிழக்கு மாநிலங்கள் தவிர, பெப்ரவரி 27அன்று நடந்த ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலையும் கவனிக்க வேண்டியது அவசியம். இங்கு, வியாழனன்று வாக்குகள் எண்ணப்பட்டு, முடிவுகள் அறிவிக்கப்பட்டன. பதிவான 1.7 இலட்சம் வாக்குகளில் 65 வீதம் பெற்ற காங்கிரஸ் வேட்பாளர் ஈ. வி. கே. எஸ். இளங்கோவன், 39 ஆண்டுகளுக்குப் பிறகு, சட்டமன்றப் பிரவேசம் செய்கிறார்.

சட்டமன்ற உறுப்பினராகஇருந்த இவரின் மகன் திருமகன் ஈவேரா மாரடைப்பால் காலமானதையடுத்து இந்த இடைத்தேர்தல் நடத்தப்பட்டது. காங்கிரஸ் கட்சி தனது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டது என்பதை விட, தனது கூட்டணிக் கட்சி வேட்பாளருக்கு அதிக ஆதரவு என்பதையே பறைசாற்ற விரும்பி, பெருமளவில் தனது கட்சியைப் பிரசாரத்தில் ஈடுபடுத்திய முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கு இந்த வெற்றி, ஒரு பிறந்த நாள் பரிசாக அமைந்தது.

தமிழகம் மட்டுமல்லாமல், தி. மு. க. செல்வாக்கு பெற்றுள்ள, நாட்டின் பிற பகுதிகளிலும் ஸ்டாலினின் 70ஆவது பிறந்த நாளைத் தொண்டர்கள் உற்சாகமாகக் கொண்டாடினர்.

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் வெற்றி, திமுகவின் 20 மாத 'திராவிட மொடல்' ஆட்சிக்குக் கிடைத்த அங்கீகாரம் என்று முதல்வர் ஸ்டாலின் பெருமை கொண்டாடினார். தேர்தல் அதிகாரி வெற்றியை அறிவித்த பிறகு, ஸ்டாலினுக்கே இந்த வெற்றி உரித்தானது என்று காங்கிரஸ் வேட்பாளர் இளங்கோவனும் அறிக்கை விடுத்தார். ஆனால், பிறகு, ஜெயலலிதா இல்லாத அ. தி. மு. கவை மக்கள் ஏற்கவில்லை என்றும் கூறினார்.

தனது திராவிடக் கொள்கைகளின் அடிப்படையிலான நிர்வாகத்தைத் தமிழக மக்கள் அங்கீகரித்ததால் தான் இடைத் தேர்தலில் வெற்றி கிடைத்தது என்று வலியுறுத்திய ஸ்டாலினுக்கு இது மகிழ்ச்சியளித்திருக்காது.

எதிரிக் கட்சி அ. தி. மு. க. வேட்பாளர் கட்டுப்பணத்தை இழந்து படுதோல்வி அடையக் கடுமையாக உழைக்குமாறு தனது அமைச்சர்களுக்கும் கட்சியின் மூத்த உறுப்பினர்களுக்கும் அறிவுறுத்தியிருந்தார் ஸ்டாலின். மிகப் பெரிய அளவில் பணத்தை வாரி இறைத்தும் வாக்காளர்களைப் பட்டிகளில் கைதிகள் போல, அடைத்து வைத்தும் ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைத்து விட்டதாக தி. மு. க மீது குற்றம் சாட்டினார் அ. தி. மு. க. இடைக்கால பொதுச் செயலாளரும் முன்னாள் முதல்வருமான எடப்பாடி கே.பழனிசாமி. தனது மோசமான தோல்விக்குப் பிறகு ஜனநாயகத் தைப் பணநாயகம் வென்றது என்று கருத்து தெரிவித்தார் அ. தி. மு. க. வேட்பாளர் தென்னரசு.

அ. தி. மு. க. தோல்வியைக் கொண்டாடியது தி. மு.க மட்டுமில்லை, எம். ஜி. ஆரால் உருவாக்கப்பட்டு, அம்மாவால் (ஜெயலலிதா) வலுப்படுத்தப்பட்ட கட்சியைத் தனது ஆணவம் மற்றும் எதேச் சதிகார செயல்பாட்டால் அழித்து விட்டதாக எடப்பாடி பழனிசாமி மீது குற்றம் சுமத்தும் முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர் செல்வமும் அவரது ஆதரவாளர்களும் கூடத்தான் மகிழ்ந்தனர். பழனிசாமி பன்னீர்செல்வம் கோஷ்டிகளையும் ஒன்றிணைக்க நீண்ட காலமாக முயன்று வந்தது, கூட்டணிக் கட்சியான பா. ஜ. க. ஆனால், அந்த முயற்சி வெற்றி பெறவில்லை.

இப்போது டில்லியில் உள்ளது போன்ற அதே நிலை, தமிழகத்திலும் ஏற்பட்டுள்ளது. ராகுலின் அரசியல் செல்வாக்கு வீழ்ந்து வரும் சூழலில், மற்ற எதிர்க் கட்சிகள் பா. ஜ. கவுக்கு எதிராக ஒன்றிணைய மறுப்பது போல, தனது ஒரே எதிர்க்கட்சியான அ. தி. மு. க. உடைந்திருப்பதாலும் மற்றோர் எதிர்க்கட்சியான பா.ஜ. க., திராவிட மண்ணில் தனது வேர்களை ஆழமாகப் பரப்ப இன்னமும் முயன்று கொண்டிருப்பதாலும் மட்டுமே ஸ்டாலின் தமிழகத்தில் கோலோச்சுகிறார்.

சென்னையில், முக்கிய தேசிய எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் கை கோர்த்து ஒரே மேடையில் போலி ஒற்றுமையைப் பறைசாற்றி, ஸ்டாலினின் பிறந்த நாள் விழா பேரணியைச் சிறப்பித்த தருணத்தில், 2024 பாராளுமன்றத் தேர்தலில் பா. ஜ. கவுக்கு எதிராக ஒன்றிணைய, தேசிய அரசியலில் தனது தோழர்களுக்கு'' ஸ்டாலின் அழைப்பு விடுத்தார். யார் வெற்றி பெற்று, யார் பிரதமராக வர வேண்டும் என்பதை விட, யார் பிரதமராக இருக்கக் கூடாது யார் ஆட்சியில் இருக்கக் கூடாது என்பது தான் எங்கள் கொள்கை என்றார் ஸ்டாலின்.

இப்படிப்பட்ட எதிர்மறைக் கொள்கையால் மக்கள் ஈர்க்கப்படுவார்களா என்பது கேள்விக்குறியே. இது என்னை ஈர்க்கவில்லை. எந்த ஒரு கட்சியும் அதன் தலைவரும் முன்வைக்கும் நேர்மறைத் திட்டங்கள் தேர்தல் வாக்குறுதியில் இருந்தால் தான் அறிவார்ந்த வாக்காளர் எவரும் ஈர்க்கப்படுவாரேயன்றி, ஒரு தனிநபருக்கு எதிரான வெறுப்பின் அடிப்படையிலான கொள்கையால் ஈர்க்கப்படார்.

அதானி நிதி மோசடி குறித்த விவாதத்தின் முடிவில் பாராளுமன்றத்தில் மோடி கூறியதை இங்கு நினைவு கூர விரும்புகிறேன். சேற்றில் செந்தாமரை மலரும் என்பதற்கிணங்க, அவர், தன் மீது எதிர்க் கட்சிகள் சேற்றை வாரி இறைக்க இறைக்க, நாடு முழுவதும் தாமரை மலரும் என்று குறிப்பிட்டார்.

2024 பாராளுமன்றத் தேர்தலில் மோடியைத் தோற்கடிக்க, எதிர்க்கட்சிகள் ஒன்றுபடவேண்டும் என்று ஸ்டாலின் வீரமாக அறைகூவல் விடுத்த நிகழ்வை அச்சடித்த மையின் ஈரம் காயுமுன்னரே, மேற்குவங்க முதல்வர் மம்தா பனர்ஜி, தனது திரிணாமுல் காங்கிரஸ் கட்சி எந்தக் கூட்டணியிலும் இடம்பெறாது என்றும் தனித்துத் தேர்தலில் களம் காணவுள்ளதாகவும் அறிவித்துள்ளார்.

ஒரு தருணத்தில் மோடிக்கு எதிராக. எதிர்க்கட்சிப் பிரதமர் வேட்பாளர்களாக ஜெயலலிதாவும் மம்தாவும் கருதப்பட்டனர். தமிழகத்தின் இரும்புப் பெண்மணியாக ஜெயா பெயர் பெற்றிருந்த அந்தச் சூழலில், ஊடக, அரசியல் வட்டாரங்களில் வங்கப் புலி என்று கருதப்பட்டவர் மம்தா. ஆனால், அண்மையில் வட



கிழக்கு மாநிலங்களில் நடந்த தேர்தல்களில் தனது கட்சி வேட்பாளர்களின் பரிதாப நிலை, மம்தாவின் ஆதிக்கம் மேற்கு வங்கத்தைத் தாண்டி செல்லுபடியாகாது என்பதை ஊர்ஜிதப்படுத்தியுள்ளது.

ஸ்டாலின், காந்தி குடும்பம் மற்றும் பா.ஜ. க. எதிர்ப்புத் தரப்பினர் அனைவரும் இணைந்து மோடியை எதிர்க்கப் போராடும் நிலையில், இவரின் இந்தத் தனித்துப் போட்டியிடும் அறிவிப்பு, இந்த முயற்சியை வலுவிழக்கச் செய்யும். அதே நேரத்தில், ஒவ்வொரு தேர்தலாக, காவிப் படை வலுப் பெற்று வருகிறது.

திரிபுராவிலும் நாகாலாந்திலும் தனியாகவும் மேகாலயாவில் கூட்டணியாகவும் பா. ஜ. க. பெற்றுள்ள வெற்றிகள், அடுத்த ஆண்டு மே மாதம் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்குக் கட்டியம் கூறுபவை என்று பா. ஜ. க. மார்தட்டிக் கொள்வதிலும் நியாயம் இருக்கிறது.

அண்மையில், நான் வடகிழக்கு மாநிலங்களுக்குச் சென்ற போது, என் அரை சதத்துக்காக எனக்கு வாழ்த்து கூறினார்கள். அதைப் பற்றி நான் விசாரத்த போது, நான் சுமார் 50 முறை வடகிழக்குப் பகுதிகளுக்குச் சென்றுள்ளதை எடுத்துக் கூறினார்கள். அடிக்கடி விஜயம் செய்ததால் நான் அவர்கள் இதயத்தைக் கவர்ந்து விட்டேன். இது எனக்கு மிகப் பெரிய வெற்றி என்று சந்தோஷப்பட்டார் மோடி.

அரசியல் ரீதியாக மட்டுமல்லாமல், பொதுமக்கள் மத்தியிலும் மோடியின் செல்வாக்கு அதிகரித்துத் தான் வருகிறது. பொது மக்கள் பார்வையில் ஒவ்வொரு படியாக மேலே ஏற, இவரது அடுத்த நிலைத் தலைவரான அமித் ஷாவும் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலும் இவருக்குப் பக்கபலமாகச் செயல்படுகின்றனர். வெறும் மோடி வெறுப்பை மட்டும் கைகொள்ளாமல், மக்களை ஈர்க்கக்கூடிய ஓர் அரசியல் திட்டம் எதுவும் எதிர்த் தரப்பிடம் இல்லை என்பதும் உண்மை. காவிப் படையை வெல்லத் தேவையான உறுதியான ஒற்றுமையும் அவர்களிடையே இல்லாததால், நாளுக்கு நாள் அந்தத் தரப்பு வலுவிழந்து வருகிறது.

வாக்குச் சாவடிகளில் தங்கள் தேர்வு குறித்து முடிவு செய்ய, மக்களுக்கு ஒரு கவர்ச்சிகரமான தலைவர் (மோடி போல) அல்லது உணர்ச்சிபூர்வமான ஒரு விவகாரம் (இந்திரா அல்லது ராஜீவ் கொலை போல) அல்லது ஆட்சிக்கு எதிரான ஒரு தீவிரமான காரணம் (இந்திராவின் அவசரகால ஆட்சி போல) தேவைப்படுகிறது. ஒரு கட்சியோ கூட்டணியோ தேர்தலில் போட்டியிட்டு வெல்ல, வலுவான அரசியல் அமைப்பு, சீராக உத்திகள் வகுத்து செயல்படும் திறன், போதுமான பண மற்றும் தொண்டர் பலம் ஆகியவை தேவை.

இவை அனைத்திலும் மிக மோசமான நிலையில் இருப்பது மோடியை எதிர்க்கும் படை. காங்கிரஸ் இன்னும் சோனியா - ராகுல் - பிரியங்கா தலைமையையே நம்பியிருக்கிறது (மல்லிகார்ஜீன கர்கே பெயருக்கு மட்டும் கட்சித் தலைவராக இருந்தாலும், காந்தி குடும்பத்தின் ஆணைகளின்படியே அவர் செயல்படுகிறாரென குற்றம் சாட்டப்படுகிறது).

இந்த காந்திகளின் தலைமையும் தொடர் தோல்வியையே தந்திருக்கிறது. மற்ற கட்சிகளும் கூட வலுவான நிலையில் இல்லை. அநேக கட்சிகள், நாடு தழுவிய ஆதிக்கம் இன்றி, தத்தம் மாநில எல்லைகளுக்குள்ளேயே கட்டுப்பட்டு இருக்கின்றன.

அண்மையில், செய்தியாளர்களிடையே உரையாற்றிய மல்லிகார்ஜீன கர்கே, தேர்தலில் முன் நிறுத்தத்தங்களிடம் ஒரு பிரதமர் வேட்பாளர் தற்சமயம் இல்லை என்றும் பாராளுமன்றத் தேர்தலில் வென்ற பிறகே பிரதமர் தேர்ந்தெடுக்கப்படுவார் எனவும் கூறும் அளவுக்கு எதிர்க்கட்சிகள் தரப்பில் நிலைமை மோசமாகவே உள்ளது. அதாவது, இந்தியாவின் பிரதமர் வேட்பாளராக ராகுல் காந்தியை முன் நிறுத்த காங்கிரஸ் தயாராக இல்லை என்பதை கர்கேவின் புலம்பல் வெளிப்படுத்துகிறது.

வடகிழக்கு மாநிலங்களின் தேர்தல் பிரசாரம் முழு வீச்சில் இருந்த தருணத்தில், இளவரசர் ராகுல், பாரத் ஜோடோ' யாத்திரை செய்து கொண்டும் பிறகு, மார்ச் 1 அன்று, மூன்று மாநிலத் தேர்தல் தோல்வியால் அவரின் கட்சியின் மூத்த தலைவர்கள் பலரும் கோபத்தில் முகம் சிவந்திருந்த நிலையிலும் கேம்பிரிட்ஜ்

பல்கலைக் கழகத்தில் உளறல் உரையாற்றியும் உள்ளார்

வழக்கம் போல். அங்கு உதிர்ந்த சில முத்துகள் என் போனில் நானே பெகாசஸ் வைத்திருந்தேன். அரசியல்வாதிகள் அநேகம் பேர் தங்கள் போன்களில் பெகாசஸ் வைத்திருந்தனர். உளவுத் துறை அதிகாரிகள் என்னை அழைத்து, 'நீங்கள் என்ன பேசுகிறீர்கள் என்பதில் கவனமாக இருங்கள், ஏனென்றால் நாங்கள் அதைப் பதிவு செய்கிறோம்' என்றார்கள்

சீன கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த அமைப்பின் மூலம் சீனா நல்லிணக்கத்தை உருவகப்படுத்துகிறது.

சீனா ஆற்றல், ஓட்டம் மற்றும் செயல் முறைகளைப் பார்த்து பின்னர் அவற்றை வடிவமைக்க முயற்சிக்கிறது.

இந்த உருவகத்தைப் பயன்படுத்தினால், பெல்ட் அண்ட் ரோட் என்றால் என்ன என்று புரிந்து கொள்ளலாம்

# இன்னும் 10 வருடங்களின் பின்னர்!

அரசியல் பற்றி பேசுவதற்கும், அரசியலை சரியாக பேசுவதற்கும் இடையில் மலையளவு வேறுபாடுண்டு. அரசியலை எவர் வேண்டுமானாலும் பேசி விட்டுப் போகலாம் ஒரு மரக் கறிக்கடையில் இருப்பர், இறைச்சிக் கடையில் இருப்பவர், ஏன் யாசகம் செய்பவரும் பேசலாம். இவ்வாறு பேசுபவர்கள் ஒவ்வொருவரும் அவர்களின் விருப்பு வெறுப்புக்களின் வழியாகவே அரசியலை புரிந்து கொள்வார்கள். அதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு.

ஆனால் ஒரு சமூதாயத்தின் எதிர்காலம் தொடர்பில் சிந்திப்பவர்கள் சாமாணியர்கள் போன்று அரசியலை, தங் களின் விருப்பு வெறுப்புக்களிலிருந்து நோக்க முடியாது. அரசியலை சரியாக புரிந்து கொள்ள முற்படுவதென்றால் என்ன? கடந்த கால அனுபவங்களிலிருந்து கற்றுக் கொண்டு, நிகழ் காலத்தை அணுகுவதும், அதிலிருந்து எதிர்



காலத்தை கையாளுவதற்கான வாய்ப்புக்களை தேடுவதும் தான் சரியானதொரு அரசியலாக இருக்க முடியும். ஆனால் யுத்தம் முடிவுற்று பதின்மூன்று வருடங்கள் சென்று விட்ட பின்னரும் கூட, தமிழ் அரசியல் சூழலில் இடம் பெறும் உரையால்களில் அரசியல் முதிர்சியை காணவில்லை. அனைவருமே, அதே பழைய சகதிக்குள்ளேயே மூழ்கிக் கிடக்கின்றனர்.

இப்போதும் துரோகி, ஒட்டுக்குழு, காட்டிக் கொடுப்பாளர், இப்படியான சொற்களைக ளையே கேட்க முடிகின்றது. தமிழரசு கட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து வெளி யேறிய பின்னர், நேற்று வரையில் ஒன்றாக பயணித்தவர்களை நோக்கி, எதுவித குற்றவுணர்வுமின்றி, காட்டிக் கொடுத்தவர்கள், சந்திகளில் நின்று கொலை செய்தவர்களென்று சாதாரணமாக கூற முடிகின்றதென்றால், தமிழ் சமூகத்தின் அரசியல் முதிர்சியை என்னவென்பது! கடந்த காலத்திலிருந்து கற்றுக் கொள்ளும் ஒரு சமூகம் இவ்வாறான போக்கை ஒரு போதுமே ஆதரிக்காது.

இவ்வாறான சொற்களை பயன்படுத்த முற்படும் அரசியல்வாதிகளை கண்டிக்கும் போக்கை எங்குமே காண முடியவில்லை. கடந்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட துரோகி, காட்டிக்கொடுப்பாளர் போன்ற சொற்களின் வழியாக தமிழர்கள் சாதித்தது என்ன? நமக்குள் நாமே வெறுப்பையும் விரோதங்களையும் வளர்த்ததை தவிர, வேறு எதனை சாதிக்க முடிந்தது?

முக்கால் நூற்றாண்டு கால அரசியல் அனுபவம் நமக்குண்டு. அதற்கு முற்பட்ட, பொன்னம்பலம்களின் காலத்தை இந்தக் கட்டுரை கருத்தில் கொள்ளவில்லை. இந்த முக்கால் நூற்றாண்டில் நாம் கற்றுக் கொண்டதென்ன? செல்வநாயகம் தொடக்கம் சம்பந்தன் வரையில் பல் வேறு கோரிக்கைகள் காலத்திற்கு காலம் உச்சரிக்கப்பட்டிருக்கின்றது.

தமிழ் புதிய புலிகள் தொடக்கம் தமிழீழ விடுலைப் புலிகள் வரையிலான ஆயுத விடுதலைப் போராட்ட அனுபவங்கள் நமக்கு ஏராளமான விடயங்களை கற்பித்திருக்கின்றது. தமிழரசு கட்சி மேடைகளில் ஒலித்த துரோகி தியாகிக் கதைகள் பின்னர், ஆயுத விடுதலை இயக்கங்களின் மத்தியில் துப்பாக்கிக் குண்டுகளின் வழியாக தீர்த்துக் கொள்ளப்பட்டது.

ஆங்கிலப் புலமை கொண்ட, அப்புக் காத்து அரசியல்வாதிகள் பின்னர், சிறிலங்கா இராணுவத்தின் எண்ணிக் கையை விடவும் அதிகமானவர்களை கொண்டிருந்த தமிழ் ஆயுத இயக்கங்கள் அனைத்தினதும் இறுதி அடைவு என்ன? இன்று தமிழர்கள் வந்து சேர்ந்திருக்கும் இடத்தையெண்ணி பெருமைப்பட என்ன இருக்கின்றது?

ஆனால் நாம் கடந்து வந்த பாதை நமக்கு போதுமான படிப்பினைகளை தந்திருக்கின்றது. இதிலிருந்து கற்றுக் கொள்வது மட்டும் தான் நாம் செய்ய வேண்டியதாகும். சட்டப்புலமை, ஆங்கிலப் புலமை, இராணுவ ஆற்றல் இவையனைத்தும் இருந்தும் தானே



நாம் தோல்வியுற்றிருக்கின்றோம். அப்படியானால் இவற்றையும் தாண்டி அரசியலில் சிந்திக்கும் திறன் அவசியமென்பதைத் தானே, கடந்த காலம் நமக்கு கற்றுத்தருகின்றது. ஏனெனில் அவைகளின் மூலம் அரசியல் சவால்களை வெற்றிகொள்ள முடியு மென்றால், ஏற்கனவே நாம் அனைத்து சவால்களையும் வெற்றி கொண்டல்லா இருந்திருக்க வேண்டும்.

இன்றைய தமிழ் தேசிய அரசியலை உற்றுநோக்கினால் ஒரு விடயம் தெளிவாகும். அதாவது, நமது அனைத்து உரையாடல்களும் தோல்விக்கு விளக்கமளிப்பதாகவும், மற்றவர்களை குற்றம் சாட்டுவதாகவுமே இருக்கின்றது. ஒரு கட்சியை பிறிதொரு கட்சி குற்றம்சாட்டுவது போன்றே, மறுபுறம், அரசாங்கத்தை குற்றம் சாட்டுவது, இந்தியாவை குற்றம் சாட்டுவது, அமெரிக்காவை குற்றம் சாட்டுவது. கடந்த பதின்மூன்று வருடகால அரசியலை உற்று நோக்கினால் இதனைத் தவிர வேறு எதனையும் நம்மால் காணமுடியாது.

முள்ளிவாய்க்காலில் ஆரம்பித்த குற்றச் சாட்டுக்கள், இப்போது முள்ளிவாய்க் காலுக்கு பின்னரான குற்றச்சாட்டுக் களாக மாறியிருக்கின்றது. முதலில் ஒரு உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதாவது, ஈழத் தமிழர்கள் மீது எவருக்கும் தனியான பிரியங்கள் இல்லை, அப்படி தனியான ஈடுபாடு தமிழர்கள் மேல் இருந்திருந்தால், முள்ளிவாய்க்கால் அவலம் நிகழ்ந்திருக்காது. ஒரு வரையறுக்கப்பட்ட நிலப் பகுதிக்குள் யுத்தம் இடம் பெற்றால் மக்கள் கொல்லப்படுவார்கள் என்பதை எவருமே அறியாமல் இருக்கவில்லை.

ஆனால் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முடிவுக்கு முன்னால் ஏனைய அனைத்து விடயங்களும் இரண்டாம் பட்சமாகியது. ஆனால் விடுதலைப் புலிகளின் முடிவுக்கு முன்னர் உலகம் சில எச்சரிக்கைகளை வழங்காமலும் இருக்கவில்லை. புலிகளுக்கு முன்னால் இருந்த ஒரு தெரிவை புலிகள் நிராகரித்த போது, மற்றவர்கள், அவர்களுக்கு முன்னாலிருந்த ஒரேயொரு தெரிவை எடுத்தனர். இதில் ராஜபக்சக்கள் ஒரு கருவி மட்டும் தான். அதனை ராஜபக்சக்கள் புரிந்து கொள்ள தவறியபோது, அவர்களுக்கான நெருக்கடி ஆரம்பித்தது.

இன்று பயங்ரவாதத்தை வெற்றி கொண்டதாகவும், பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கு உலகிற்கே ஆலோசனை வழங்க முற்பட்ட கோட்டபாய ராஜபக்சவின் நிலையென்ன என்பதை அனைவருமே பார்த்துக் கொண்டிருக்கின்றனர். விடுதலைப்புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தின் போது, ஒரு புலம்பெயர் தமிழ் புத்திஜீவி, மேற்குநாட்டு ராஜதந்திரி ஒருவருடனான உரையாடலின் போது, பரிமாறப்பட்ட விடயமொன்று வெளியாகியிருந்தது.

அதாவது, மகிந்த ராஜபக்ஷக்ஷ் மேற்குலகிற்கு எதிரான நிலைப்பாடுடைய ஒருவர். அவர் முன்னெக்கும் யுதத்தை ஏன் ஆதரிக்கின்றீர்கள் – இதற்கு அந்த ராஜதந்திரி வழங்கிய பதில், இப்போது ராஜபக்ஷ பிரபாகரனை பார்த்துக் கொள்ளட்டும், பின்னர் நாம் ராஜபக்ஷவை பார்த்துக் கொள்வோம்.

ஏனெனில் உலகிற்கு விடுதலைப் புலிகள் ஒரு விடயமல்ல. எனது முன்னைய பத்தியொன்றிலும் குறிப்பிட்டிருக்கின்றேன். இறுதி யுத்தத்தின் போது ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளராக இருந்தவர், கோடன் வைஸ். தனது அனுபவங்களை தொகுத்து 'கூண்டு'' என்னும் பெயரில் நூல் ஒன்றையும் எழுதியிருந்தார். அவர் 2011இல், வெளிவிவகார சஞ்சிகையில் புலிகளின் இரத்தம் என்னும் தலைப்பில் கட்டுரையொன்றை எழுதியிருந்தார். அதில் அவர் கூறிய ஒரு விடயமொன்று, உலகை புரிந்து கொள்வதற்கு போதுமானது. அவர் எழுதுகின்றார், புலிகள் இல்லாத உலகம் முன்னரை விடவும் இப்போது சிறப்பாக இருக்கின்றது. இவ்வளவு தான், புலிகள் இயக்கதிற்கு உலகம் கொடுத்த இடம்.

உலகின் பார்வையில் நமது தியாகங்கள், அர்ப்பணிப்புக்கள் அனைத்தும் பயங்கரவாதமாகும். நாம் நமக்குள் எவ்வாறான புனிதங்களையும் பாதுகாத்துக் கொள்ளலாம், ஆனால் உலகின் பார்வையோ வேறு. விடுதலைப் புலிகள் இயக்கம் வீழ்த்தப்பட்டு, அதன் தலைவர் பிரபாகரன் உயிரிழந்து, பதின்மூன்று வருடங்கள் கழிந்து விட்ட பின்னரும் கூட, அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகள் புலிகள் அமைப்பை இப்போதும் பயங்கரவாத பட்டியில் தான் வைத்திருக்கின்றனர். இதிலிருந்து ஒரு விடயத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, நமக்குள் நாம் துரோகியென்றும், ஒட்டுக்குழுவென்றும், காட்டிக் கொடுப்பாளர்களென்றும் அடிபட்டுக் கொண்டிருக்கும் போது, உலகமோ அனைத்தையும் பயங்கரவாதமென்னும் ஒரு சொல்லால் தூக்கியெறிந்து விட்டது.

இன்றைய சூழலில் ஒரு புதிய தலைமுறை அரசியலை கையிலெடுக்க வேண்டும். அது அரசியலை மதமாக்காத, கடந்தகாலத்தை கற்றுக்கொள்வதற்காக மட்மே பேசுகின்ற ஒரு தலைமுறையாக இருக்க வேண்டும். கடந்த காலத்தில் ஒரு விடயம் ஆதரிக்கப்பட்டது, ஏற்றுக் கொள்ளப்பட்ட என்பதற்காக, அதனை எல்லாக் காலத்திலும் காவித் திரிய வேண்டுமென்பதல்ல. நிகழ் காலத்தின் தேவைகளோடு ஒரு விடயம் பொருந்தவில்லையாயின், அது பயனற்றது. ஏனெனில் நிகழ் காலம் என்பது மட்டுமே உண்மையானது.

ஏனெனில் அது மட்டுமே நம்மிடமுண்டு. நம்மிடமுள்ள ஒன்றிலிருந்து தான் எதிர்காலத்தை நோக்க வேண்டும். இப்போதும் சிலர் வட்டுக் கோட்டை தீர்மானம் தொடர்பில் பேசுவதுண்டு. வட்டுக்கோட்டைத் தீர்மானமென்பது, 1976ஆம் ஆண்டில்,

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா –



அன்றைய தலைமுறை முன்வைத்த விவகாரம், அதனை கேள்விகளின்றி பிறிதொரு தலை முறை எதற்காக சுமக்க வேண்டும்? வட்டுக் கோட்டை தீர்மானத்தை முன் வைத்த செல்வநாயகம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி, ஒரு தெளிவான புரிதலுடன் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைக்கவில்லை. அடையும் வழி தெரியாமலேயே தனிநாட்டுக் கோரிக்கை முன் வைக்கப் பட்டது. எப்படி அடையப் போகின்றீர்களென்னும் கேள்விக்கு செல்வநாயகம் வழங்கிய பதில், நாங்கள் ஒரு நிலைப் பாட்டை முன் வைக்கின்றோம், அவர்கள் எங்களை வெளியில் வீசி விடுவார்கள். ஆனால் நடந்ததோ வேறு. செல்வநாயகத்தின் தவறால், ஒரு தலைமுறையே அழிந்து போயிருக்கின்றது ஆனால் செல்வநாயகத்தின் குடும்ப வழித் தோன்றல்களோ நிலத்திலேயே இல்லை.

ஒரு தலைமுறை தெளிவான வேலைத் திட்டமற்று முன்வைத்த கோரிக்கைகளை, எதற்காக பிறிதொரு தலைமுறை சுமக்க வேண்டும்? அரசியலை இந்த அப்படையில் தான் இளைய தலைமுறை புரிந்துடிகொள்ள வேண்டும். அவர் கூறினார் – இவர் கூறினார் என்பதற்காகவெல்லாம் கடந்த காலத்தின் நிலைப்பாடுகளை நிகழ்காலத்தில் சுமக்க முற்படக் கூடாது.

யுத்தமில்லாத கடந்த பதின்மூன்று வருடங்களை உற்று நோக்கினால் ஒரு விடயம் தெளி வாகும். அதாவது, அரசியல் தீர்வு தொடர்பில் முன்னோக்கி பயணிக்க முடியவில்லை. தமிழர்கள் என்ன தான் சத்தங்களை எழுப்பினாலும் கூட. ஒரு கட்டத்திற்கு மேல் போக முடியாதென்னும் நிலைமையே காணப்படுகின்றது. ஏன் முடியவில்லையென்னும் கேள்விக்கு சிலரிடம் இருக்கும் சென்டிமெட் பதில், இந்தியாவிற்கு கரிசனையில்லை. இந்தியாவிற்கு கரிசனையில்லை என்றால், இன்னொன்றை தெரிவு செய்து கொண்டு, அரவணைக்கப்படுகின்றன. எதிரிகளிடம் சரணடைவதன் மூலம் அவர்களையே நண்பர்களாக்கும் திறனை கடந்த வரலாறு முழுவதும் சிங்கள அரசியல் தலைவர்கள் கொண்டுள்ளனர்.

கடந்த கால அனுபவங்களில் இருந்து சிந்தித்தால் தமிழர்களின் அரசியல் எதிர்காலம் மிகவும் கையளறு நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. இன்னும் 10 வருடங்களுக்குள் விடயங்களைக் கையாளா விட்டால் 13வது திருத்தச் சட்டம் கூட தமிழர்களுக்கு இல்லாது போகலாம்.

# இந்து -பௌத்த வழிபாடு இருந்த குருந்தூர் மலை யாருக்குச் சொந்தம்?

கட்டுரையாளர்:
வரலாற்று ஆய்வாளர்
கலாநிதி
என்.எஸ்.கே.திருச்செல்வம்



முல்லைத்தீவு குருந்தூர் மலையில் புதிதாக எவ்விதமான நிர்மாணங்களையும் செய்யக் கூடாது என கடந்த ஆண்டு ஜீலை மாதம் 19ஆம் திகதி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் கட்டளையை பிறப்பித்திருந்தது.

இந்தக் கட்டளையை வலுச் சேர்க்கும் வகையில் நவம்பர் மாதம் 24ஆம் திகதி பிறிதொரு கட்டளையும் பிறப்பிக்கப் பட்டிருந்தது. இந்நிலையில் நீதிமன்றக் கட்டளைகள் புறக்கணிக்கப்பட்டு தற் பொழுது குருந்தூர் மலையில் விகாரை அமைக்கும் பணிகள் நிறைவுக்கு வந்துள்ளன.

புராதன சமய பண்பாடுகள் நிறைந்த வரலாற்றுத் தலமான குருந்தூர் மலை விவகாரத்தால் அண்மைக் காலமாகவே இந்து பௌத்தம் மற்றும் தமிழர்கள் சிங்களவர்கள் என இரு துருவ மயப் பட்ட சமூகத்தினரின் மத்தியில் சர்ச்சைக்குரிய தகவல்கள் புற்றீசல் போல் வெளிக்கிளம்பிய வண்ணமுள்ளன.

உண்மையில் குருந்தூர் மலையின் ஆதிகால வரலாறு என்ன? ஆரம்ப காலத்தில் எத் தரப்பினர் அங்கே ஆதிக்கம் செலுத்தினர்? எந்த சமய பண்பாடு அங்கே நிலவியது என்பதை பற்றி சுருக்கமாக விளக்குகிறார், வரலாற்று ஆய்வாளர் கலாநிதி என்.கே.எஸ். திருச் செல்வம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நெடுங் கேணி எனும் இடத்திலிருந்து வட கிழக்குப் பக்கத்தில் சுமார் 14 கி.மீ தூரத்தில் தண்ணிமுறிப்பு குளம் அமைந்துள்ளது. அந்த குளத்தின் வடக்கு பக்கத்தில் தான் குருந்தூர் மலை உள்ளது. இந்த மலைக்கு குருந்தனூர் மலை என்றொரு பெயருமுண்டு.

இந்த மலையில் சுமார் 200 ஏக்கர் பரப் பளவில் காணப்பட்ட பழங்கால கட்டட இடிபாடுகளுக்கு மத்தியில் அங்கே ஆதி ஐயனார் எனும் சிவனை தெய்வமாக கருதி இந்து மக்கள் வழிபட்டு வந்தனர்.

அதேவேளை ஆதி ஐயனாருக்கு பூசைகள் செய்து, படையல் வைத்து வழி படும் முறையும் வழக்கமாக மேற் கொள்ளப்பட்டு வந்தது.

இத்தகைய சூழ்நிலையில் அந்த இடத் துக்கு வந்த பௌத்த பிக்குகள் சிலர் மலையில் காணப்பட்ட இடிபாடுகளை பார்த்து, 'இது எமது பௌத்த வழி பாட்டுக்குரிய இடம்' என கூறியதை தொடர்ந்தே, குருந்தூர் மலை தொடர் பான பிரச்சினைகள் ஆரம்பமாயின.



அதனையடுத்து அங்கு இராணுவத் தோடு இணைந்து தொல்பொருள் திணைக்களம் அகழ்வாராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ள தொடங்கியது. குறிப்பாக, இந்த மலையின் உச்சியில் பௌத்த தூபி இருந்திருக்கக்கூடும் என கருதப்பட்ட இடத்தில் ஆய்வுப் பணிகளை முன்னெடுத்தது.




இவ்வாறு அகழ்வுப் பணிகள் தொடர்ந்த போது அந்த இடத்தில் எட்டு வரிகளை கொண்ட ஓர் உருளை வடிவ தொல் பொருள் சின்னம் காணப்பட்டது.

உடனே, இது பௌத்த தூபிக்குரிய 'யூப்ப கல' என தொல்பொருள் ஆய்வாளர்கள் கூறினர். யூப்ப கல அல்லது யூ ப்ப ஸ்தம்பம் என்றால் பழங்காலத்தில் பௌத்த தூபியின் உச்சியில் அமைக்கப்படும் ஒரு கற்தூண் ஆகும். எட்டுத் திக்கும் உள்ள காவல் தெய்வங்களுக் காக இந்த தூண் தூபியின் உச்சியில் வைக்கப்படுவது பழங்கால கட்டுமான வழக்கமாக இருந்தது.

இது போன்ற தூண்கள் 5ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் தூபிகளில் காணப் பட்டன. அவற்றை தற்போது பார்த்தால், கரடு முரடான தோற்றத்திலேயே இருக் கும். மிஹிந்தலையில் இத்தகைய யூப்ப ஸ்தம்பமொன்றே உள்ளது.

எனினும், 5ஆம் நூற்றாண்டுக்குப் பின் னரான காலங்களில் இந்த தூண்களை அமைக்கும் வழக்கம் இருக்கவில்லை. எனினும், யூப்ப கல தூணுக்கு பதிலாக 'தேவதா கொட்டுவ' எனும் சதுர வடிவ அமைப்பே காணப்பட்டிருக்கிறது.

குருந்தூர் மலை அகழ்வின் போது வெளிப்பட்ட இந்த கல்லின் மேற்பகுதி எட்டுப் பட்டை (வரிகள்) கொண்டது எனவும், அடிப்பகுதி சதுர வடிவானது எனவும் கூறப்படுகிறது. இந்த உருளை போன்ற கல்லை பௌத்த தூபிக்குரிய ப்ப கல என சிங்கள தரப்பினர் கூறினர்.

ஆனால், இது யூப்ப ஸ்தம்பம் அல்ல என்பதற்கும் ஆதாரமான குறிப்புகள் உள்ளன. புராண அபயகிரி விஹாரய' என்ற நூலில் பேராசிரியர் டி.ஜி.குலதுங்க 'யூப்ப ஸ்தம்பம்' என்பது பண்டைய தூபிகள் அனைத்திலும் கட்டாயமாக அமைக்கப்பட வேண்டிய ஒரு பாகம் அல்ல எனவும் சேருவில தூபி, சாஞ்சி தூபி, ருவன்வலிசாய தூபி போன்ற தூபிகளில் இந்த அமைப்பு இருந்ததற் கான குறிப்பில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

அதேபோல மிகப் பெரிய பழைமையான ஜேதவனராம போன்ற தூபிகளிலும் 'யூப்ப கல' இருக்கவில்லை. அப்படியாயின், குருந்தூர் மலையிலுள்ள இந்த உருளை வடிவ கல் 'சிவலிங்கம்' தான் என்பதே உண்மை. அதுவும் அந்த லிங்கம் பல்லவர் கால கட்டடக்கலை பாணியை கொண்ட எட்டுப்பட்டை தாராலிங்கம்.

தாராலிங்கத்தில் மூன்று வகைகள் உள் ளன. அவற்றில் எட்டு பட்டை கள் அல்லது வரிகள் கொண்ட தாராலிங்கங்கள் இரண்டாவது வகையை சேர்ந் தவை.




இது போன்ற பல தாராலிங்கங்கள் தமிழகத்திலும் உள்ளன. எனவே, குருந் தூர் மலையில் காணப்படுவது சிவ வழிபாட்டைக் குறிக்கும் தாராலிங்கமே ஆகும். மேலும், இது பல்லவர் காலத் துக்கு முற்பட்ட நாகர் கால லிங்க வடிவம் என பேராசிரியர் எஸ். பத்ம நாதன் தனது பேட்டியிலும் கூறியிருந் தார்.

அத்துடன் இந்த லிங்கத்தின் புகைப் படத்தை தமிழகத்தின் இராமநாதபுரம் தொல்லியல் ஆய்வு நிறுவனத்தின் தலை வர் ராஜகுரு வேலுச்சாமியிடம் காட்டி னேன். அவர் இதனை 'எட்டுப்பட்டை அஷ்டலிங்கம்' என தெரிவித்தார்.

இத்தகைய ஆதாரங்களை கொண்டுள்ள லிங்கம் காணப்படும் இடத்தை ஆதி ஐயனார் கோவில் என தமிழர்கள் வழி பட்டு வந்தனர். இது சிவ வழிபாட்டுக்குரிய தலம் என்றும் இந்து சமயம் பின்பற்றப்பட்ட இடமெனவும் கூறினர். எனினும், அங்கு கோயில் கட்டப்பட வில்லை.

அதேவேளை தொல்லியல் திணைக்களம் இதை பௌத்தர்களின் வழிபாட்டுக்குரிய இடம் என்றும் பௌத்த தூபி இருந்த இடம் எனவும் உறுதியாக குறிப்பிடுகி றது. இத்தகைய சூழலிலேயே குருந் தூர் மலை சர்ச்சைக்குரிய இடமானது. எனினும், குருந்தூர் மலையில் இந்து, பௌத்தம் ஆகிய இரு மதங்களும் இருந்துள்ளன என்பதே பலர் நம்ப மறுக்கும் உண்மை.

குருந்தூர் மலையில் இரு மத வழிபாடு களும் நிலவியமைக்கு முக்கியமான ஆதாரம், ஆங்கிலேயர் காலத்தில் மேற் கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியே என லாம்.

ஆங்கிலேய ஆய்வாளர்களான ஜே.பி. லூயிஸ், எச்.சி.பி. பெல் ஆகியோர் குருந் தூர் மலையில் ஆய்வுகளை மேற் கொண்டு சில குறிப்புகளை பதிவு செய்துள்ளனர். அதன்படி, குருந்தூர் மலையில் மிகப் பெரிய ஆவுடையார் (லிங்கத்தின் அடிப்பாகம்) இருந்ததாக வும், அதனருகில் கை கூப்பியவாறு ஒருவர் அமர்ந்திருப்பதை போன்ற சிலை, உடைந்த நந்தி சிலை, செங்கல் லாலான பழங்கால கிணறொன்று இருந் ததாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இதில் ஆவுடையார் 3 அடி அகலமும் 3.3 அடி நீளமும் கொண்ட சதுர வடி வுடையது. இதன் நடுப்பகுதியில் 1.1 அடி விட்டமுடைய குழி உள்ளது. இதுவே வட்ட வடிவமான லிங்கம் இருந்த பகுதியாகும். இந்த ஆவுடையார் சோழர் காலத்துக்குரியது எனலாம்.

இவை யாவும் சிவ வழிபாட்டுத் தலத் தின் எச்சங்கள் என அவர்கள் குறிப் பிட்ட அதேவேளை அங்கே ஒரு தூபி யின் அடையாளம் இருந்ததால், பௌத்த வழிபாடும் இருந்திருக்கிறது என்பதை இதனூடாக சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த இரு வழிபாடுகளுக்கும் உரிய ஆதாரமான ஆங்கில ஆய்வுக் குறிப்பு களை *H.C.P.*பெல் 1905ஆம் ஆண்டு தனது ஆய்வறிக்கையில் 34ஆம் பக்கத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

யு ளஅயடட நெயசடல டநளநடடநன னயபயயடிய.

A few stone pillars beside which lies the greatly damaged stone figure of a bull. This was probably a sivite temple.

A large yoni stone 3 ft. by 3 ft. 3 in. with a hole 1 ft.1 1/2 in. in diameter cut in it.

A brick well 4 ft. 6 in. wide and 25 feet deep. 20 feet being dry laid brickwork and the rest cut into soft rock.

A sedent figure in an attitude of prayer cut in bas-relief on a slab of stone 2 ft. 6 in. by 1 ft. 9 in. several pillar buildings with Naga-raja guardstones.

A brick building probably a Hindu Kovil which has collapsed and become a mound.

These show a thorough mixture of buddhist and Hindu ruins. எனவே, இவற்றின் அடிப்ப டையில் (22ம் பக்கம் பார்க்க)

# இந்தோ - பசுபிக் நாடுகளுடனான ஒத்துழைப்பு இராஜதந்திரத்தால் தென்னிலங்கை மீள்கிறதா?

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் அரசாங்கத்தின் முயற்சி இனப்பிரச்சினை விடயத்தில் ஏமாற்றும் உத்தியைக் கொண்டுள்ளது என்பது வெளிப்படையானது. அத்தகைய கையாளுகை அரசியலில் குவாட் நாடுகளும் தென்னிலங்கை ஆட்சியாளருடன் இணைந்து செயல்படுவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

மீளவும் அமெரிக்கா, ஜப்பான், இந்தியா போன்ற நாடுகளின் தூதுவர்களும் இராஜதந்திரிகளும் நல்லிணக்கம் என்ற செய்முறைக் கூடாக இனப் பிரச்சினையை மட்டுமல்ல அதற்கான காலத்தையும் கடந்து செல்ல முனைகிறதை கண்டு கொள்ளமுடிகிறது.

மைத்திரி-ரணில் அரசாங்க காலத்திலும் இத்தகைய நல்லிணக்கம் பற்றிய உரையாடலே முதன்மையாக அமைந்ததுடன், தமிழ் மக்கள் எந்தவித முன்னேற்றத்தையும் அடையாத ஏமாற்றுத்தனத்திற்கு துணை போனதாகவே அமைந்திருந்தது. தென்னிலங்கை எப்போதும் தனது நெருக்கடியைக் கையாள நல்லிணக்கம், பேச்சுவார்த்தை, உடன்பாடு மற்றும் புதிய அரசியலமைப்பு என உரையாடுவதன் மூலம் காலத்தை கையாள்வதில் வெற்றி கண்டு வருகிறது. மீளவும் அதற்கான காலப் பகுதியாகவே தற்போதைய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்தகைய காலநீடிப்பை தென்னிலங்கை அடைய குவாட் நாடுகளையும் துணைக்கு அழைத்துக் கொண்டு செயல்படுகிறது. இக்கட்டுரையும் திறந்த மற்றும் சுதந்திரமான இந்தோ -பசுபிக் வளையத்திற்குள் இலங்கைத்தீவை குவாட் நாடுகள் உட்படுத்துவதில் மேற்கொள்ளும் நகர்வுகளையும் அதற்குள்ளால் ஈழத்தமிழரது தீர்வு பலியிடப்படுவதையும் தேடுவதாக அமையவுள்ளது.

ஜப்பானின் நிதி உதவியுடன் திருகோணமலைத் துறைமுகத்தில் Night Navigation Operation நிலையம் ஒன்று அண்மையில் (17.02.2023) திறந்து வைக்கப்பட்டுள்ளது. துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் சிறிபாலடி சில்வாவும் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவரான மிககோசி பிடாக்கியும் இணைந்து அதற்கான நடவடிக்கையை தொடங்கி வைத்துள்ளனர்.

2017 ஆம் ஆண்டு இரு நாட்டுக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட நிதியுதவியின் அடிப்படையில் NNO ஆரம்பிக்கப்பட்டுள்ளது- ஒரு மில்லியன் ஜப்பானிய யென் நிதியில் மேற்கொள்ளப்பட்ட திட்டமானது, ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முறைமைக்குள்ளால் கையாளப்பட்டுள்ளது.

இதன் தொழில்நுட்பம் திறன் கொண்டதாக இரவு நேரச் செயல்பாடுகளை விருத்தி செய்யும் நோக்கில் திருகோணமலைத் துறைமுகத்தின் நடவடிக்கைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இரவு நேரத்தில் துறைமுகத்திற்குள் கப்பல்கள் தரித்து நிற்கும் பட்சத்தில் புதிதாக நுழையும் கப்பல்கள் மறுநாள் அதிகாலை வரை காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது. இதனால் துறைமுகத்தின் செயல்திறன்கள் இடையூறுக்குள் உள்ளாக்கப்படுகின்றன. இவற்றை தவிர்ப்பதே NNO இன் பிரதான நோக்கமாகும்.

இதேநேரம் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜீலி சங் குறிப்பிடும் போது, இலங்கை தற்போது முகங் கொடுத்துள்ள பொருளாதார சவால்களை அடிப்படையாகக் கொண்டு முன்னெப்போதையும் விட தற்போது சுபீட்சமான இந்தோ-பசுபிக் பிராந்தியத்தை கட்டியெழுப்புவதை முன்னிறுத்தி ஒன்றிணைந்து செயலாற்றுவதற்கு அனைத்துத் தரப்பினரும் இணங்க வேண்டியது அவசியமானதாகும் என்று தெரிவித்துள்ளார். இந்தோ-பசுபிக் பிராந்தியத்திற்கான பகிரப்பட்ட இலக்கு தெற்காசியப்




பிராந்தியம் மீதான தாக்கம் எனும் நூல் வெளியீட்டின் போதே ஜூலி சங் மேற்படி விடயத்தை தெரிவித்துள்ளார். மேலும் அவரது உரையில், இந்தோ-பசுபிக் செயல்திட்டத்தின் அடிப்படைக் கூறுகள் சுதந்திரமானதும் சுபீட்சமானதும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதும் மீண்டெழக் கூடியதும் பாதுகாப்பானதாகவும் உள்ளது.

இதனை உறுதி செய்வதே இந்தோ-பசுபிக் பிராந்தியத்தின் பிரதான நோக்கம் எனவும் தெரிவித்தார். ஏறக்குறைய அமெரிக்கத் தூதுவர் இலங்கைத்தீவில் விஜயம் செய்யும் அனைத்து பிரதேசங்களிலும் இந்தோ-பசுபிக் உபாயத்திற்கான அறியப்பாட்டை வலியுறுத்தி வருகிறார். அவரது டுவிட்டரை அவதானிக்கும் போது இந்தோ-பசுபிக் பிராந்தியத் திட்டத்தின் முக்கியத்துவத்தை அனைத்து இலங்கைப் பிரஜைகளின் முன்னும் முதன்மைப்படுத்தி வருகிறார். அதன் மூலம் அவர் மக்கள் மத்தியில் பிரபல இராஜதந்திரியாக மாறி வருகின்றார்.

மத்தியதர மக்கள் மத்தியில் தனது எண்ணத்தை குவித்து வரும் இராஜதந்திரியாகவும் காணப்படுகின்றார். அதன் மூலம் இலங்கைத் தீவில் புதிய அல்லது மாறுபட்ட அரசியல் கலாசாரத்தை கட்டியெழுப்ப முயல்வதனை காணக் கூடியதாக உள்ளது. அதன் மூலம் இந்தோ-பசுபிக் திட்டத்தின் நோக்கத்திற்குள் இலங்கைத்தீவை உட்படுத்துவதில் முன்னேறியுள்ளார் என்பதைக் காட்டுவதாகவே அவரது நகள்வுகள் காணப்படுகின்றன.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான 75 ஆவது ஆண்டு ,ராஜதந்திர உறவை நினைவு கொள்ளும் தூதுவர், அதன் மூலம் இலங்கையுடன் அமெரிக்கா கொண்டுள்ள உறவை அடையாளப்படுத்துகின்றார். அதன் அவசியப்பாட்டையும் தனித் தன்மையையும் கோடிட்டுக் காட்டுவதில் அவரது பதவிக்காலம் முதன்மையானதாக உள்ளது. அவ்வாறே ஜப்பானியத் தூதுவரும் தூதரகமும் வடக்கு, கிழக்கு உட்பட இலங்கை முழுவதும் அதிகமான தொடர்புகளைக் கொண்டு செயல் படுகிறதைக் காணமுடிகிறது.

குறிப்பாக இலங்கைத்தீவில் ஜப்பானின் பாரிய பொருளாதாரத் திட்டங்கள், கல்வி வாய்ப்புகள் மற்றும் வேலை வாய்ப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் மூலம் இலங்கைத் தீவை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்கும் உத்தியின் மூலம் இந்தோ-பசுபிக் திட்டத்திற்குள் இணைப்பதிலும் கவனம் கொண்டுள்ளதை காணக் கூடியதாக உள்ளது. இவ்வகையான நகர்வுகள் இலங்கைத்தீவிலிருந்து சீனாவை பின்தள்ளி குவாட் நாடுகளது செயல்பாடுகளை முன்னகர்த்துவதே பிரதான நோக்கமாகத் தெரிகிறது. இது தென்னிலங்கை ஆட்சியைப் பாதுகாப்பதும் அதற்கான உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதும் குவாட் நாடுகளுக்கு அவசியமான செய்முறையாக உள்ளது. தூதுவர்களும் தூதராலயங்களும் அந்தந்த நாடுகளின் நலன்களை இராஜதந்திர ரீதியில் கையாளுபவர்கள் என்ற வகையிலேயே புரிந்து கொள்ளப்பட வேண்டியது அரசியலாகும். இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீல்வதற்கு இந்தோ-பசுபிக் திட்டம் அவசியமானது என்ற உரையாடலை குவாட் நாடுகள் ஏற்படுத்துவதில் வெற்றி கண்டுள்ளதாகவே தெரிகிறது.

மேற்படி நூல் வெளியீட்டுக்கு சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மஜிலிந்த பீரிஸ் முக்கிய அதிதியாக கலந்து கொண்டிருந்தார். அவ்வாறே அந்நூலின் தொகுப்பாசிரியரான கலாநிதி ஹரிந்திர விதானகே நிகழ்விலும் நூலின் தனித்துவத்தின் முக்கியத்துவத்தை முதன்மைப்படுத்தியிருந்தார். இத்தகைய குழுமத்தின் அடையாளப்படுத்தல் தென்னிலங்கை இந்தோ-பசுபிக் உபாயத்தை உள்வாங்கியுள்ளதென்பதை கோடு காட்டியுள்ளது. அதாவது தென்னிலங்கையின் புலமைத்தளம் மற்றும் பாதுகாப்புத்தரப்புகுவாட் நாடுகளுடனான ஒத்துழைப்பினை அங்கீகரித்துள்ளன என்பதாகும்.

இந்நிகழ்வில் விசேட அதிதியாக கலந்து கொண்ட அட்மிரல் பீற்றர் ஏ.குமடாட்டா தெரிவிக்கும் போது, இந்தோ-பசுபிக் திட்டத்தின் நோக்கம், சுதந்திரமானதும் பாதுகாப்பானதுமான பிராந்தியத்தை கட்டியெழுப்புவதன் அவசியம் உணர்த்தப்பட்டதுடன், இதில் அனைத்துத் தரப்பும் ஒன்றிணைய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார். இவை அனைத்தும் தென்னிலங்கையின் அரசியல், பொருளாதார, ,ராணுவத் தரப்புகள் குவாட் நாடுகளுடன் ஒத் ழைக்க தயாராகி விட்டன என்பதை கோடிட்டுக் காட்டுகிறது.

அதேநேரம் சீனாவை இத்தரப்பு முற்றாக புறந்தள்ளவும் இல்லை என்பதை புரிந்து கொள்வதும் அவசியமாகவே தெரிகிறது. இது இலங்கை ,ராஜதந்திரத்தின் 2500 ஆண்டு கால வரலாற்றின் படிப்பினையாகவே உள்ளது. அதுவே சிங்கள- பௌத்த படிப்பினையாகவும் தெரிகிறது. அதனைப் புரிந்து கொள்ள ஈழத்தமிழ் அரசியலோ, ஈழத்தமிழ் புலமையோ தயாரில்லாத நிலையே தற்போதைய துயரத்திற்கு அடிப்படையாக உள்ளது என்பது தவிர்க்க முடியாத புரிதலாகும். வேண்டுமாயின் தமிழ் சினிமாவிலும் இலக்கியத்திலும் ஒரே உறையில் இரண்டு வாள்கள் உறங்காது என வசன நடை எழுத முடியும். அது அரசியலாகி விடாது, ஆனால் தென்னிலங்கையின் இராஜதந்திரத்திற்கு முன்னால் அத்தகைய வார்த்தைகள் தோல்வியின் முகங்களாகவே தெரிகிறது. இரண்டு வாள்கள் அல்ல பல வாள்களை ஒரே உறைக்குள் உறங்க வைக்கும் திறன் தென்னிலங்கை இராஜதந்திரத்திற்கு

கட்டுரையாளர்
தாயகத்தில் இருந்து
பேராசிரியர்
K.T.கணேசலிங்கம்



உண்டு. அதனையே கடந்த வரலாறு முழுவதும் வெளிப்படுத்தியுள்ளது.

கடந்த ஆட்சியின் தோல்விக்கான காரணத்தை நன்கு விளங்கிக் கொண்ட தென்னிலங்கை தரப்புகள் அதனை இனியும் ஏற்பட அனுமதிக்காது செயல்பட ஆரம்பித்துள்ளன. அத்தகைய எண்ணத்தை பாதுகாக்கும் உத்தியில் அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் செயல்படுகின்றன. இது மட்டுமன்றி இலங்கைத்தீவின் இறைமையை பாதுகாப்பதிலும் அமெரிக்காவின் பங்களிப்பு அதீதமாக உள்ளது. இலங்கையின் இறைமை, பாதுகாப்பு, ஒருமைப்பாடு மற்றும் கடலோரப் பாதுகாப்புக்கான உத்தரவாதம் இந்தோ-பசுபிக் திட்டத்திற்குள் அடங்கியுள்ளதுடன், அதற்காகவே இலங்கைத்தீவு இந்தோ-பசுபிக் திட்டத்திற்கு ஒத்துழைக்க வேண்டும் என்பதை அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்தி வருகிறார். அவரது டுவிட்டரை பின்தொடரும் எவரும் இலகுவில் புரிந்துகொள்ள முடியும்.

எனவே தென்னிலங்கை மேற்கின் உபாயங்களை தனது இலக்குக்குள் வளைத்துப் போடுவதில் வெற்றி கண்டுள்ளது. அமெரிக்காவையும் சீனாவையும் இந்தியாவையும் ஒரே தளத்தில் கையாளும் திறனுடன் தென்னிலங்கை அரசியல், இராணுவம் இயங்குகிறது. ஈழத் தமிழர் அரசியல் சீனாவை பார்ப்பது போல் தென்னிலங்கை அமெரிக்காவையோ, இந்தியாவையோ அல்லது மேற்கு நாடுகளையோ நோக்கவில்லை.

தென்னிலங்கையின் இராஜ தந்திரத்திற்குள்ளால் அனைத்து நாடுகளும் அரவணைக்கப்படுகின்றன. எதிரிகளிடம் சரணடைவதன் மூலம் அவர்களையே நண்பர்களாக்கும் திறனை கடந்த வரலாறு முழுவதும் சிங்கள அரசியல் தலைவர்கள் கொண்டுள்ளனர். ஈழத் தமிழரது நூற்றாண்டு காலத் தோல்விக்குப் பின்னாலுள்ள அடிப்படை சிங்கள-பௌத்தத்தின் இராஜதந்திர செல்நெறியென்பதை மறுக்க முடியாது.

2500 ஆண்டு கால வெளியுறவுக் கொள்கைக்கான வரலாற்றை இலங்கை கொண்டுள்ள நாடு என்பதை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். இதற்கான மேலதிக தேடலை மேற்கொள்ள விரும்பும் எவரும் V.L.B.Mendis எழுதிய Foreign Relations of Sri Lanka: from earliest times to 1965 எனும் நூலைப் பார்க்கவும்.

தற்போதும் அதற்கான நகர்வுகளை தெளிவான தந்திரோபாயத்துடன் தென்னிலங்கை மேற் கொண்டு வருகிறது. ஈழத்தமிழரது அரசியல் தீர்வுக்கான எந்த முகாந்திரமும் இன்றிய நடவடிக்கையை தென்னிலங்கை இந்தோ பசுபிக் ஒத்துழைப்பின் பெயரால் எடுத்து வருகிறது.

ஒட்டுமொத்த இலங்கைத்தீவின் ஒத்துழைப்பே இந்தோ-பசுபிக் அணிக்கும் சீனாவுக்கும் தேவையாக உள்ளது. அதனை தென்னிலங்கை தாராளமாக முன்னகர்த்த தயாராகி விட்டது. அதனால் தீர்வும் நல்லிணக்கமும் மீளவும் ஒரு உச்சரிப்பு மட்டுமே.

# விவேக் இராமசாமி:- அமெரிக்க அதிபர் பதவிக்கு ரம்புடன் மோதும் இந்தியர்!



அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ள குடியரசுக் கட்சியைச் சேர்ந்த மூன்று நபர்களில் இரண்டு பேர் இந்திய வம்சாவளி அமெரிக்கர்கள்.

இதில் நிக்கி ஹேலி ஓரளவு அனைவருக்கும் பரிச்சயமான நபர். ஆனால், விவேக் ராமசாமியோ பெரிய அளவில் அறியப்படாதவர்.

கலி∴போர்னியாவைச் சேர்ந்த ஊடகவியலாளர் சவிதா படேல், விவேக் ராமசாமியின் வெற்றி வாய்ப்பு, அவரால் மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா என்பதை இந்த கட்டுரையில் மதிப்பிடுகிறார்.

தொழிலதிபரும், WokeInc என்ற புத்தகத்தை எழுதியவருமான விவேக் ராமசாமி, பிப்ரவரி 21ஆம் தேதி ∴பாக்ஸ் நியூஸ் ஊடகத்துக்கு அளித்த பேட்டியில் அதிபர் தேர்தலில் போட்டியிடுவதற்கான தனது விருப்பம் குறித்து பேசியிருந்தார். புதிய அமெரிக்க கனவை உருவாக்க கலாச்சார இயக்கம் ஒன்றை உருவாக்க அவர் விரும்புகிறார். மக்களை பிணைப்பதை விட பெரியது எதுவும் இல்லையென்றால், பன்முகத்தன்மை அற்றமற்றதாகி விடும் என்றும் அவர் கூறுகிறார்.

37வயதாகும் விவேக் ராமசாமி, ஓஹியோ மாகாணத்தில் பிறந்தவர். இவரது பெற்றோர் இந்தியாவில் உள்ள கேரளாவை பூர்விகமாக கொண்டவர்கள். ஹார்வார்ட், யேல் போன்ற புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்ற விவேக், பயோடெக் தொழிலதிபராக முதலில் பணம் சம்பாதிக்க தொடங்கினார். பின்னர், சொத்து மேலாண்மை நிறுவனம் ஒன்றை அவர் தொடங்கினார்.



இனவெறி, காலநிலை குறித்த தனது பேச்சுகளை எப்போதும் நியாயப்படுத்தும் அவர், அவற்றை கார்ப்பரேட் உலகின் 'விழிப்புவாதம்' என்று அழைக்கிறார். இனவெறி, காலநிலை ஆகியவை வணிகங்களையும் நாட்டையும் பாதிக்கிறது என்றும் கூறுகிறார். ஒரு நிறுவனத்தின் சமூக, சுற்றுச்சூழல் தாக்கத்தை அளவிடப் பயன்படும் ESG (சுற்றுச்சூழல், சமூக மற்றும் பெருநிறுவன ஆளுகை) முயற்சிகளை அவர் எதிர்க்கிறார்.

மேலும், உயர்கல்வியில் உறுதியான நடவடிக்கைகளை கைவிட விரும்பும் அவர் அமெரிக்க பொருளாதாரம் சீனாவை சார்ந்து இருப்பதையும் குறைக்க விரும்புகிறார்.

2022 ஆம் ஆண்டு, தேர்தலில் நியூ ஹாம்ப்ஷயரில் இருந்து அமெரிக்க செனட்டிற்கு போட்டியிட்ட குடியரசுக் கட்சியைச் சேர்ந்த விக்ரம் மன்ஷார மணி போன்ற சிலருடன் விவேக் ராமசாமியின் கருத்து ஒத்துப் போகிறது. விவேக் ராமசாமி குறித்து மன்ஷார மணி பேசுகையில், அவர் மிகவும் ஈர்க்கக் கூடியவர், தெளிவான மற்றும் சிந்தனைமிக்கவர்' என்று விவரிக்கிறார், மேலும் அமெரிக்காவைப் பிரிப்பதற்குப் பதிலாக ஒன்றிணைக்க' தங்கள் இருவரின் கருத்துக்கள் பயன்படுவதாக அவர் கூறுகிறார்.

அடையாள அரசியல் அமெரிக்காவில் வேரூன்றியிருக்கிறது, அது ஒன்றுபடுத்தும் போக்கைக் காட்டிலும் பிளவுபடுத்தும் போக்குடன் வந்துள்ளது. நம்மிடம் பொதுவாக உள்ளதை நாம் உருவாக்க வேண்டும்,' என்று கூறிய விவேக், சமீபத்தில் நியூ ஹாம்ப்ஷயரில் அவரது குடும்பத்தினர் நிக்கி ஹேலிக்கு விருந்தளித்ததையும் குறிப்பிடுகிறார்.

அதேநேரத்தில் அரசியலில் எதிர் தரப்பில் உள்ள இந்திய அமெரிக்கர்களோ விவேக் ராமசாமியின் அரசியலோடு உடன்படவில்லை என்றும் அவரது பிரசாரத்தில் குறையுள்ளதாகவும் கூறுகின்றனர்.

AAPI (ஆசிய அமெரிக்கர்கள் மற்றும் பசிபிக் தீவுவாசிகள்) விக்டரி ∴பண்ட், நிறுவன தலைவரும் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவருமான சேகர் நரசிம்மன், நிறைய ஆசிய-அமெரிக்கர்கள் அரசியலில் முக்கியத்துவம் பெறுவதைக் கண்டு மகிழ்ச்சியடையும் அதே வேளையில், விவேக் ராமசாமியின் கருத்துக்களில் தனக்கு நம்பிக்கை இல்லை என்று கூறுகிறார்.

அவர் ஒரு தொழிலதிபர், தெளிவான திட்டம் வைத்துள்ளார். ஆனால், அவருடைய வாக்குறுதிகள் என்ன?'' என்று கேள்வி எழுப்பும் சேகர் நரசிம்மன், "முதியோர்களுக்கான மருத்துவ வசதி குறித்து அவர் கவலைப் படுகிறாரா? உள்கட்டமைப்புக்கு செலவிடுவது குறித்த அவரது திட்டங்கள் என்ன? அவருக்கு நிலையான பதவிகள் இல்லை. தனது கொள்கைகளையும் அவர் வெளிப்படுத்தவில்லை. என்று கூறுகிறார்.

விவேக் ராமசாமியின் பிரசாரங்களை யதார்த்தமற்றது, நடைமுறைக்கு மாறானது என்று கூறும் அவர், தன்னிடம் கூறுவதற்கு ஏதோ இருக்கிறது. அதிபர் தேர்தலில் போட்டியிடுவதால் தனது கருத்துகள் கேட்கப்படும் என்று விவேக் ராமசாமி நம்புகிறார் என்றும் தெரிவித்தார்.

பல ஆண்டுகளாக குடியரசு கட்சியினரை ஆதரித்து வரும் சமூக உறுப்பினர்கள் பலரும், அதிபர் தேர்தலில் போட்டிடுவதாக அறிவிப்பதற்கு முன்புவரை விவேக் ராமசாமி குறித்து தாங்கள் கேள்விப்பட்டதே இல்லை என்று கூறுகின்றனர்.

அவரை நான் பார்த்ததே இல்லை. அவரிடம் பணம் இருப்பதாகவும் சிறப்பாக பேசுவார் என்றும் என்னிடம் கூறப்பட்டது. ஆனாலும், அவர் வேட்பாளர்களில் ஒருவராகவே இருப்பார். அவர் தேர்வு செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இல்லை'' என்று கூறுகிறார் குடியரசு கட்சியின் ஆதரவாளரான மருத்துவர் சம்பத் சிவாங்கி. மற்றவர்களும் இதனை ஏற்றுக் கொள்கின்றனர்.

தேர்தலில் போட்டியிட விரும்புவதாக அவர் கூறாமல் இருந்திருந்தால் அவர் குறித்து யாரும் பேசியிருக்க மாட்டார்கள் என ஹோட்டல் அதிபர் டேனி கெய்க்வாட் கூறுகிறார். ஜார்ஜ் டபிள்யூ புஷ்ஷிலிருந்து குடியரசுக் கட்சியின் அனைத்து அதிபர் வேட்பாளர்களுக்கும் இவர் நிதி திரட்டியுள்ளார்.

அதிபர் தேர்தலில் போட்டியிட விரும்பும் விவேக் ராமசாமியின் தைரியத்தை தான் பாராட்டுவதாக கூறும் டேனி கெய்க்வாட், இந்திய- அமெரிக்கர்களுக்கான ஒரு உத்தியை வைத்திருப்பது அவருக்கு மிகவும் முக்கியம் என்றும் குறிப்பிட்டார்.

தேர்தலுக்கு இன்னும் நிறைய நாட்கள் உள்ளதாக குறிப்பிட்ட அவர், முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் புளோரிடாவின் தற்போதைய ஆளுநர் ரான் டிசாண்டிஸ் ( தேர்தலில் போட்டியிடுவது குறித்து இன்னும் இவர் முறையாக அறிவிக்கவில்லை) ஆகியோரை சுட்டிக்காட்டி, புளோரிடாவில் மட்டும் இரண்டு வலிமையான வேட்பாளர்கள் இருக்கக்கூடும் என்று கூறினார்.

அதிபர் வேட்பாளராக தேர்வு செய்யப்படுவதில் டொனால்ட் ட்ரம்ப், ரான் டிசாண்டிஸ், நிக்கி ஹேலி ஆகியோர் இடையே மும்முனை போட்டி இருக்கும் என்பது குடியரசுக் கட்சியைச் சேர்ந்த இந்திய அமெரிக்கர்களின் கணிப்பாகும். மேலும் முன்னாள் அதிபர் ட்ரம்பின் சட்டப் போராட்டங்களில் இன்னும் நிச்சயமற்ற தன்மை இருப்பதால் முன்கூட்டியே கூட்டணிகளை உருவாக்குவதற்குப் பதிலாக காத்திருக்க விரும்புகிறார்கள்.

ஹேலியின் பிரசார உத்தியை தான் விரும்புவதாக கூறும் சிவாங்கி, ஒருவேளை அதிபர் தேர்தலுக்கான வேட்பாளர் போட்டியில் இருந்து டொனால்ட் ட்ரம்ப் விலகினால், ஹேலியை தான் ஆதரிப்பேன் என்றும் குறிப்பிட்டார்.

ட்ரம்ப் 40 சதவீத மதிப்பீட்டை பெற்றுள்ளார். ஹேலியோ ஒற்றை இலக்கத்தில் மதிப்பீட்டை பெற்றுள்ளார். எனினும் அவர் எங்கள் வேட்பாளர். அவர் இந்திய- அமெரிக்கராக இருப்பதுதான் அவருடன் நாங்கள் நெருக்கமாக இருப்பதற்கு காரணம் என அவர் தெரிவித்தார்.

கடந்த மூன்று தேர்தல்களிலும் தங்களின் அரசியல் பங்கேற்பு அதிகரித்திருப்பது தொடர்பாக, அரசியல் வேறுபாடுகளை கடந்து இந்திய- அமெரிக்க மக்கள் மகிழ்ச்சி கொள்கின்றனர்.


ஒரு அழகான விஷயம் நடந்து வருகிறது. இந்திய-அமெரிக்கர்கள் முன்னிலை பெறுகின்றனர் என்று கெய்க்வாட் கூறுகிறார், சமீபத்திய முயற்சியானது உள்ளூர் அளவில் கூட தேர்தலில் போட்டியிட இந்திய - அமெரிக்கர்களை ஊக்குவிக்கும் என்றும் கூறினார்.

அரசியலில் எதிரெதிர் துருவங்களில் உள்ளவர்களும் இதனை ஆமோதிக்கின்றனர்.

ராமசாமி போன்ற பெயர் கொண்ட அமெரிக்கர்கள் போட்டியிடுவதை எங்கள் குழந்தைகள் பார்த்தால், ஒரு கண்ணாவோ, கிருஷ்ணமூர்த்தியோ வெற்றி பெற முடியும் என்று நரசிம்மன் கூறுகிறார்.

# அமெரிக்க அதிபர் பைடனின் இரகசிய உக்ரைன் பயணம் ஏன்?

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



ரஷ்யா உக்ரைன் மீது தொடுத்த போர் துவங்கி பிப்ரவரி 24 அன்று ஓராண்டு முடிந்தது. போரின் உக்கிரம் தற்காலிகமாக சற்று தணிந்திருந்தாலும் எவரும் சமாதானத்தைப் பற்றி பேசக்கூட தயாராக இல்லை. இத்தகைய சூழ்நிலையில், பிப்ரவரி 20அன்று, முன்னறிவிப்பு ஏதும் இல்லாமல், உக்ரைன் தலைநகரான கியேவுக்கு, அமெரிக்க அதிபர் ஜோ பைடன் ரகசிய பயணம் மேற்கொண்டது பலரையும் வியப்பில் ஆழ்த்தியது.

அமெரிக்க அதிபர் வழக்கமாக தனது விசேஷ விமானத்தில் பயணிப்பார். சென்ற ஆண்டு அதிபர் பைடன் உக்ரைன் போன போது அவ்விமானத்தில் போனார். அதற்கு மாறாக, இம்முறை பைடன் ரயில் மூலமாக உக்ரைன் தலை நகரை அடைந்தது போது, விமான தாக்குதலை அறிவிக்கும் சைரன்கள் ஒலித்தன. ஆனால் அத்தகைய தாக்குதல் அசம்பாவிதம் எதுவும் நிகழவில்லை. இந்த நிகழ்வு உலக ஊடகங்கள் இடையே மேலும் சலசலப்பை உண்டாக்கியது.

உக்ரைன் எல்லை நாடான போலந்துக்கு அமெரிக்க அதிபர் போகப் போவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருந்தது. அப்போது அவர் அதிபர் உக்ரைன் தலைநகர் செல்வாரா என்ற கேள்விக்கு, அதற்கு அதிபரின் பாதுகாப்பு கருதி அத்தகைய பயணம் மேற்கொள்ள மாட்டார் என சில செய்திகள் கூறின. அப்படி இருக்கையில், பைடன் உக்ரைனுக்கு ரகசியப் பயணத்தை மேற்கொள்ளவே, மர்மம் மேலும் அதிகரித்தது.

பொதுவாக, ஊடகங்கள் பார்வையில் ரஷ்யா உக்ரைன் மீது தொடர்ந்து நடத்தி வரும் ஏவுகணைத் தாக்குதல்களை தவிர்க்கவே அமெரிக்க அதிபரின் பயணம் ரகசியமாக மேற்கொள்ளப்பட்டது எனக் கருதப்பட்டிருந்தது. ஆனால், இப்பயணம் நிகழ்ந்த பிறகு ரஷ்ய உளவுத்துறை அமைப்பின் இயக்குனர் அலெக்சாண்டர் போர்ட்னிகோவ் ஒரு டெலிகிராம் சேனலுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் உண்மையில், கியேவுக்கு பைடனின் வருகையை பற்றி அமெரிக்கா ரஷ்யாவிற்கு ராஜதந்திர சேனல்கள் மூலம் அறிவித்து இருந்தது. ஆனால், நாங்கள் அவருடைய பாதுகாப்பிற்கு எந்த உத்தரவாதமும் அளிக்கவில்லை என்று கூறினார்!

அப்படி ரஷ்ய உளவுத்துறை இயக்குனர் கூறினாலும், பைடன் உக்ரைன் விஜயம் செய்த அதே நாளன்று, ரஷ்யா அதன் அதி நவீன கண்டம் விட்டு கண்டம் பாயும் சர்மத் ஏவுகணையை சோதனை செய்தது. பல அணு ஆயுத போர்க்கப்பல்கள் திறனைவிட வலிமை வாய்ந்த இந்த ஏவுகணைக்கு மேற்கத்திய நாடுகளில் சாத்தான் -2 (Satan II) என்ற செல்ல பெயர் உண்டு. அந்த சோதனை நடத்தப் போவதாக ரஷ்யா அமெரிக்காவுக்கு முன் கூட்டியே அறிவித்திருந்தது. அந்த ஏவுகணை முதல் முறை சோதனையில் ஏற்கனவே வெற்றி கண்டுள்ளது. அதிர்ஷ்ட வசமாக இரண்டாம் முறை நடந்த சோதனையில் ரஷ்யாவுக்கு வெற்றி கிட்டவில்லை.

ஆனால் அத்தகைய ஆபத்தான சூழ்நிலையில் அதிபர் பைடன் அந்த ரகசிய பயணத்தை மேற்கொண்டதற்கு என்ன காரணம்? வெள்ளை மாளிகையின் கூற்றுப்படி உக்ரைனின் ஆளுமைக்கும், பிராந்திய ஒருமைப்பாட்டிலும் அமெரிக்காவின் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தும் நோக்கம் தான் காரணம்!

நாட்டின் அதிபர்கள் வெளிநாடுகளுக்கு ரகசிய பயணம் மேற்கொள்வது புதிதல்ல. ஆனால் அத்தகைய பயணங்களை அதிபர்கள் எத்தகைய சூழ்நிலைகளில் மேற் கொண்டார்கள் என்பதே முக்கியம். உதாரணமாக, சிரிய அதிபர் பஷார் அல்-அஸாத் ரஷ்ய அதிபர் புடினை சந்திக்க பல முறை முன்னறிவுப்பு இல்லாத இரகசிய பயணங்களை மேற்கொண்டுள்ளார். அதற்கு, சிரியாவில் தொடர்ந்து வரும் உள்நாட்டு போரால் ஏற்பட்டுள்ள பாதுகாப்பற்ற சூழ்நிலையைத் தவிர, சர்வதேச அரசியல் காரணங்களும் உண்டு.



அமெரிக்க அதிபர் ரகசியமாக மற்ற நாடுகளுக்கு பயணிப்பது இது முதல் முறை அல்ல. பைடனுக்கு முன்னால் பதவி வகுத்த அதிபர்கள் பலர் அரசியல் மற்றும் ராஜதந்திர காரணங்களுக்காக அத்தகைய பயணங்களை மேற்கொண்டுள்ளார்கள். அத்தகைய பயணங்களில் கூட அதிபரின் பாதுகாப்புக்கு குந்தகம் விளையாமல் இருக்க விசேஷ ரகசியப் படையினர் (Secret Service) எப்போதுமே தயாராய் இருப்பார்கள். தற்போது தீவிரவாதம் தலைவிரித்தாடும் உலக சூழ்நிலையில், அமெரிக்க அதிபரின் ரகசிய படையினர் விரிவாக்கப் பட்டு, 4500 ஆள் பலம் கொண்டதாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இரகசியப் படையினருக்கு தெரியாமல் அமெரிக்க அதிபர் வெள்ளை மாளிகையை விட்டு வெளியே போவது கூட கடினம்.


ஈராக்கின் சர்வாதிகாரி சதாம் ஹுசைன் வீழ்த்தப்பட்ட எட்டு மாதங்களுக்கு பின், அதிபர் ஜார்ஜ் டபிள்யூ புஷ், நவம்பர் 2003இல் ரகசிய பயணம் மேற்கொண்டார். அப்போது ஈராக்கில் அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிரான உணர்வு நாடெங்கும் வளர்ந்து, கிளர்ச்சியாக மாறி வந்த சூழல். அப்போது நடந்த அமெரிக்க வீரர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழாவில் அதிபர் புஷ் முன்னறிவுப்பு இல்லாமல் மேடையில் தோன்றினார். இராணுவ வீரர்கள் ஆரவாரத்துடனும் கரவொலியுடனும் அவரை வரவேற்றனர். அதிபரின் அந்த முன்னறிவுப்பு இல்லாத பயணம், பாதுகாப்பை மட்டும் கருத்தில் கொள்ளாமல், இராணுவ வீரர்களை ஊக்குவிக்க மேற் கொண்ட திடீர் பயணம்.

அத்தகைய முன்னறிவுப்பு இல்லாத பயணங்கள் பலவற்றை அமெரிக்க அதிபர் ஒபாமா ஆப்கானிஸ்தான் போரின் போது மேற கொண்டார். அது போலவே, பிரிட்டன் பிரதமர் டோனி ப்ளேரும் ஆப்கானிஸ்தானில் படையினரை சந்திக்க முன்னறவிப்பு இல்லாமல் போனார். அந்த பயணங்கள் பெரும்பாலும் தீவிரவாதிகளின் தாக்குதலை தவிர்க்கவே ரகசியமாக மேற் கொள்ளப்பட்டன.


நாட்டு தலைவர்களின் சில ரகசிய பயணங்கள் பன்னாட்டு பிரச்சினைகளில் பெரும் திருப்பம் ஏற்படுத்தியதாக சரித்திரம் கூறுகிறது. லெபனானின் பிரதமர் ஸாத் அல்-ஹரீரியின் சவுதி அரேபியாவுக்கு நவம்பர் 2017ல் மேற்கொண்ட திடீர் பயணம் அவற்றில் ஒன்றாகும். ஹரீரி, சவுதி தொலைக்காட்சியில் தனது பிரதமர் பதவியை ராஜிநாமா செய்வதாக அறிவித்தார். மேலும், ஈரான் நாட்டை ஆதரவாளர்களால் தனது நாட்டில், தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாகவும் கூறினார். அவரது பேச்சால் ஏற்கனவே புகைந்து கொண்டிருந்த சவுதி-ஈரான் உறவுகள் மேலும் சீர்குலைந்தன. அதை தொடர்ந்து, லெபானின் அரசியலில் பெரும் தாக்கம் ஏற்பட்டது. எகிப்து அதிபர் அன்வர் சதாத் 1977ம் ஆண்டு நவம்பர் மாதம் அரேபிய நாடுகளின் பரம எதிரியாக கருதப்படும் இஸ்ரேலுக்கு ரகசிய பயணம் மேற் கொண்டார். அப்போது இஸ்ரேல் பாராளுமன்றமான கெனெஸ்ஸத்தில் சதாத் ஆற்றிய உரை சரித்திர முக்கியம் வாய்ந்தது. அதில், சதாத் பாலஸ்தீனத்திற்கு நியாயம் கிடைக்கவும், அந்நாட்டில் நிரந்தர அமைதி காக்கவும் தான் இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தை நடத்த தயார் என்று அறிவித்தார். இதற்கு எகிப்திலும், பல அரேபிய நாடுகளிலும் எதிர்ப்பு தோன்றினாலும், அரேபிய நாடுகளின் இஸ்ரேல் உறவில் சதாத்தின் செயல் பெரும் திருப்பு முனையாகும்.

அதிபர் சதாத் எடுத்த அந்த அமைதி காக்கும் முயற்சிக்காக அவருக்கும், அவருடன் பேச்சு நடத்திய அப்போதைய இஸ்ரேல் அதிபர் மெனகென் பிகன் அவர்களுக்கும் கூட்டாக 1978 ஆண்டு உலக சமாதானத்திற்கான நோபல் பரிசு அளிக்கப்பட்டது. ஆனால், அத்தகைய புகழ் பெற்ற சதாத்தின் ரகசிய பயணம் பதினோறு ஆண்டுகள் கழித்து அவரின் உயிருக்கே உலை வைத்தது. அதிபர் சதாத் எகிப்திய ராணுவத்தின் வெற்றி விழா அணி வகுப்பை பார்வையிடும் போது, ஓர் எகிப்திய ராணுவ அதிகாரியின் தலைமையில் நாலு பேர் கொண்ட தீவிரவாதக் குழு அவரை சுட்டுக் கொன்றது. சதாத் மேற் கொண்ட இஸ்ரேல் நல்லிணக்க முயற்சியை எதிர்த்த அந்த தீவிரவாதிகளின் தாக்குதலில், சதாத்தை தவிர மேலும் பத்து பேர் கொல்லப்பட்டனர். அந்த தாக்குதலை தொடர்ந்து எகிப்தில் ஆட்சியை கைப்பற்ற தீவிரவாதிகளின் கிளர்ச்சி வெடித்த போது, சதாக்கை அடுத்து பதவி ஏற்ற அதிபர் ஹஜீ ஸேனி முபாரக் முதல் காரியமாக இராணுவத்தை உபயோகித்து அதை ஒடுக்கினார்.


அமெரிக்க அதிபரின் உக்ரைன் பயணத்திற்கு(22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?



மேடராசி அன்பர்களே! நன்மை தீமை அறிந்து செயல்படுவீர்கள். திட்டமிட்டபடி காரியங்கள் நடந்து முடியாமல் இழுபறியாக இருக்கும். வீண் வாக்குவாதங்கள் ஏற்படும். வாகன லாபம் ஏற்படும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறி வேகம் பிடிக்கும். லாபம் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் சிறப்பான பலன் கிடைக்க பெறுவர். புதிய பொறுப்புகள் சேரும். வேலை தேடியவர்களுக்கு வேலை கிடைக்கும்.




ரிஷபராசி அன்பர்களே! பிரதி பலன் எதிர்பார்க்காமல் காரியங்களை செய்யும் குணமுடைய உங்களுக்கு இந்த வாரம் எதிர்ப்புகள் விலகும். செய்யும் காரியங்களால் பெருமை ஏற்படும். காரிய தடைகள், கூடுதல் செலவு உண்டானாலும் பண வரத்து அதிகரிக்கும். புத்திசாதூரியம் கூடும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றமான நிலை காணப்படும். பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும்




மிதுனராசி அன்பர்களே! எதைக் கண்டும் கலங்காமல் மன துணிவுடன் செயல்படுவீர்கள். எதிர்பாராத செலவு ஏற்படும். முயற்சிகளில் சிறு தடைகள் ஏற்படும். உஷ்ணம் சம்பந்தமான நோய் உண்டாகலாம். இருக்கும் இடம் விட்டு வெளியில் தங்க நேரிடும். தொழில், வியாபாரத்தில் போட்டியை சந்திக்க வேண்டி இருக்கும். கடுமையான பேச்சை தவிர்ப்பது நல்லது. மேற்கொள்வது நல்லது. குடும்பத்தில் கலகலப்பு குறையும்.




கடகராசி அன்பர்களே! எதிலும் பின்வாங்காத அஞ்சா நெஞ்சம் உடைய உங்களுக்கு வீண் செலவு ஏற்படும். காரியங்களில் தாமதம் உண்டாகும். மிகவும் வேண்டியவரை பிரிய நேரிடும். கண்மூடித்தனமாக எதையும் செய்யாமல் யோசித்து செய்வது நல்லது. தாய், தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். பொறுப்புடன் செயலாற்றுவது நல்லது.



சிம்மராசி அன்பர்களே! மனதில் உறுதி பிறக்கும். எடுத்த முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். எதிர்பாலினத்தாரால் நன்மை உண்டாகும். வீண் செலவு உண்டாகும். வீட்டை விட்டு வெளியில் தங்க நேரிடும். தொழில் வியாபாரம் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுப்பதில் தடுமாற்றம் உண்டாகும். லாபம் குறையக் கூடும்.



கன்னிராசி அன்பர்களே! மனதில் ஒன்று வைத்து வெளியில் ஒன்று பேசாத குணமுடைய உங்களுக்கு தன்னம்பிக்கை வளரும். வாக்கு வன்மை அதிகரிக்கும். சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். அறிவுத்திறன் அதிகரிக்கும். பெயரும், புகழும் கூடும். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெறும். இது வரை இருந்த தொய்வு நீங்கும். லாபம் அதிகரிக்கும். இனிமையான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களை தக்க வைத்துக் கொள்வீர்கள்.




துலாம்ராசி அன்பர்களே! எதை செய்தாலும் அதில் உள்ள லாப நஷ்டங்களை கணக்கிட்டு செயல்படுவீர்கள். மனதில் உற்சாகம் ஏற்படும். நெருப்பு, ஆயுதங்களை கையாளும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் தேவையற்ற இடர்பாடுகள் ஏற்படலாம். பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. கடன் கொடுக்கும் போது கவனம் தேவை. குறிக் கோளற்ற வீண்அலைச்சல், கூடுதல் உழைப்பும் இருக்கும். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது.




விருச்சிகராசி அன்பர்களே! காரிய அனுகூலங்கள் ஏற்படும். மனோதிடம் அதிகரிக்கும். பயன் தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். செல்வம் சேரும். வாகனம் வாங்க எடுத்த முயற்சி கைகூடும். பயணங்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் நீங்கி முன்னேற்றம் உண்டாகும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். லாபம் அதிகாரிக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். பதவி உயர்வு உண்டாகும்






தனுசுராசி அன்பர்களே! துன்பத்தையும், இன்பமாக மாற்றும் வல்லமை பெற்ற உங்களுக்கு எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். குறிக்கோளற்ற பயணங்கள் உண்டாகும். விழிப்புடன் இருப்பது நல்லது. சுப செலவுகள் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் போட்டிகளை சந்திக்க வேண்டி இருக்கும். பார்ட்னர்களுடன் சுமூகமாக செல்வது நல்லது. பழைய பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும்.



மகரராசி அன்பர்களே! மனதில் ஏதாவது குழப்பம் ஏற்பட்டு நீங்கும். சாமர்த்தியமான பேச்சு கை கொடுக்கும். பணவரத்து திருப்தியாக இருக்கும். வீண் பிரச்னைகள் நீங்கும். வெளிநாட்டு பயணங்கள் கைகூடும். தொழில் வியாபார சிக்கல்கள் நீங்கி நன்கு நடைபெறும். தொழில் வியாபாரம் விரிவாக்கம் செய்ய முயற்சி மேற்கொள்வீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவி கூடுதல் பொறுப்புகள் கிடைக்கலாம்.



கும்பராசி அன்பர்களே! பல வகையிலும் நற்பலன்கள் ஏற்படும். தெய்வ பக்தி அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும். வேலையில் மாற்றம் உண்டாகலாம். மருத்துவ செலவு உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத சிக்கலை சந்திக்க வேண்டி இருக்கலாம். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பணி குடும்பத்தினரால் மனம் நோகும் படியான நிலை உருவாகலாம்.



மீனராசி அன்பர்களே! வீண் அலைச்சல் ஏற்படும். உழைப்பு அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பயணங்களால் வீண் செலவு உண்டாகும். தொழில் வியாபாரத்தில் திடீர் தடைகள் ஏற்பட்டு நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமாக பணிகளை மேற்கொள்வது நல்லது. மேலதிகாரிகள் மற்றும் சக ஊழியர்களை அனுசரித்து செல்வது நன்மை தரும். குடும்பத்தினரிடம் நிதானமாக பேசுவது நல்லது.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# இந்து - பௌத்த வழிபாடு இருந்த

(18ம் பக்கத் தொடர்ச்சி) குருந்தூர் மலையை இந்து மற்றும் பௌத்தம் ஆகிய இரு மத வழிபாட்டுக்கும் உரிய இடமாக கருதலாம். அத்தோடு கலிங்க மாகோன் என்ற மன்னன் ஆட்சி செய்த காலத்தில் குருந்தூர் மலையை அவன் படைத்தளமாக பயன்படுத்தியதாக சூள வம்சமும் குறிப்பிடுகிறது. எனவே, வீர சைவத்தை போற்றி வழிபட்ட கலிங்க மாகோன் காலத்தில் சிவன் கோவில் கட்டாயமாக இருந்திருக்க வேண்டும். அல்லது சோழர் காலத்திலே கட்டப்பட்ட சிவன் கோவில் மாகோன் காலத்தில் வழிபாட்டுக்குரியதாக காணப்பட்டிருக்க வேண்டும்.

அந்த வகையில், குருந்தூர் மலையில் சிவன் கோவில், பௌத்த தூபி இரண்டும் இருந்துள்ளன என்பது உறுதியாகத் தெரிகிறது. எனவே, இந்துக்கள், பௌத்தர்கள் என இரு சாராருக்கும் உரிய இடமாக குருந்தூர் மலைப் பிரதேசத்தை கருதலாம். ஆயினும், அங்கு பௌத்த சமயம் மட்டும் தான் இருந்தது என்பதை ஏற்க முடியாது. இதில் ஆதங்கத்துக்குரிய விடயம் என்னவென்றால்,

குருந்தூர் மலையில் காணப்பட்ட சிவ வழிபாட்டுக்குரிய தொல்லியல் சின்னமான சதுர வடிவ ஆவுடையார், தமிழ் சமூகத்தை சேர்ந்த சிலரால் வன்னி, குமுழமுனை கிராமத்தில் உள்ள பிள்ளையார் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. அந்த ஆவுடையாரில் லிங்கம் இருந்த குழிப் பகுதியில் பிள்ளையார் சிலையை வைத்துள்ளனர். இது மிகப் பெரும் தவறு.

குறிப்பிட்ட ஓரிடத்தில் சமய வழிபாட்டுக்குரிய தொல்பொருள் சின்னமொன்று காணப்பட்டால், அந்த சின்னத்தை அகற்றாமல், அதனை அங்கேயே வைத்து அந்த இடத்தில் கோயில் கட்டி வழிபடுவதே சரியானது. அதை விடுத்து அச்சின்னத்தை அங்கிருந்து அகற்றுவதும், அதை வேறோர் இடத்துக்கு எடுத்துச் சென்று வைப்பதும் செய்யத்தகாத செயலாகும் என்று கவலையுடன் தெரிவித்தார்.

# அமெரிக்க அதிபர் பைடனின் இரகசிய உக்ரைன் பயணம் ஏன்?

(21ம் பக்கத் தொடர்ச்சி) ஒரு நாள் முன்னால் 59வது மியூனிச் பாதுகாப்பு மாநாடு ஜெர்மனியில் முடிவடைந்தது. இந்த ஆண்டு அங்கு நடந்த விவாதங்கள் உக்ரைட் போரை பற்றியதே. அதில் பல பன்னாட்டு தலைவர்களும் பங்கு பெற்றனர். அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ் தலைமையில் 50 பேர் கொண்ட குழு பங்கு பற்றியது. கமலா ஹாரிஸ் ரஷ்யா மனிதகுலத்திற்கு எதிரி என்று குற்றம் சாட்டி, உக்ரேனிய அரசுக்கு அமெரிக்காவின் நீடித்த ஆதரவை உறுதியளித்தார். பிரிட்டிஷ் பிரதம மந்திரி ரிஷி சுனக், கியேவிற்கு பிரிட்டனின் இராணுவ ஆதரவை இரட்டிப்பாக்க உறுதியளித்தார். போரில் நீண்ட காலத்திற்கு, உக்ரைனை ஆதரிக்கும் என்று அவர்கள் அனைவரும் கூறினர்.

ஆனால் மாநாட்டின் வெளியே உக்ரைன் போரை விமர்சித்த பலர் ரஷ்யாவின் வசந்த காலத் தாக்குதலைப் பற்றி கவலை கொண்டிருந்தனர். ஆகவே அவர்கள் போர் தொடர்ந்து நீடிப்பதை விரும்பவில்லை. மேற்கத்திய ஆதரவு தற்போதைய பொருளாதார நெருக்கத்தில் காலவரையின்றி இருக்க முடியாது என்று பலர் கருதினர். ஆகவே அதற்கு அரசியல் ஆதரவு குறையும், அதனால். நீண்ட போரில், மாஸ்கோ கை ஓங்கலாம் என்ற கருத்து மேலோங்கி இருந்தது.

ஒருவேளை அத்தகைய உணர்வுகளை உணர்ந்த, ஜெலென்ஸ்கி தனது உரையில் உங்கள் உதவி எங்களுக்கு வேகமாக வேண்டும். நாங்கள் விரைந்து செல்ல வேண்டும், என்று வேண்டுகோள் விடுத்தார். ஆனால், முழுமையான தீர்வுகள் எதுவும் வெளிவரவில்லை. ஒட்டு மொத்தமாக அதிபர் பைடன் பயணம் அவரது உள்நாட்டு அரசியலுக்கு உதவினாலும், உக்ரைனுக்கு எந்த அளவில் உதவும் என்பது விடை காணாத கேள்வியே!

# எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சகித்துக் கொண்டு இருந்து விடாதீர்கள்!

ஒரு தவளையை பிடித்து தண்ணீரில் போட்டு கொதிக்க வையுங்கள். அதன் வெப்பம் அதிகரிக்கும் போது, தவளை தன் உடலை அந்த வெப்ப நிலைக்கு ஏற்ப மாற்றி கொண்டே வரும்.....



வெப்பம் ஏற ஏற தவளையும் அந்த வெப்ப நிலைக்கு ஏற்ப தன் உடலை அந்த வெப்பத்துக்கு ஏற்ப மாற்றி கொள்ளும்.

தண்ணீர் கொதி நிலையை அடையும் போது, வெப்பத்தை தாங்க முடியாமல் தவளை பாத்திரத்தில் இருந்து வெளியே குதிக்க முயற்சி செய்யும். ஆனால், எவ்வளவு முயற்சி செய்தாலும் தவளையால் வெளியேற முடியாது.

ஏன் எனெனில்.... வெப்பத்துக்கு ஏற்ப தன் உடலை மாற்றி கொண்டே வந்ததால் அது வலுவிழந்து போய் இருக்கும். சிறிது நேரத்தில் அந்த தவளை இறந்து விடும்.

எது அந்த தவளையை கொன்றது...?

பெரும்பாலானோர் கொதிக்கும் நீர் தான் அந்த தவளையை கொன்றது என்று சொல்வீர்கள். ஆனால், உண்மை என்னவென்றால்

'எப்போது தப்பித்து வெளியேற வேண்டும் என்று சரியாக முடிவெடுக்காத அந்த தவளையின் இயலாமை தான் அதை கொன்றது'......

நாமும் அப்படித் தான் எல்லோரிடமும் சூழ்நிலைக்கு ஏற்ப அனுசரித்து போகிறோம். ஆனால் நாம் எப்போது அனுசரித்து போக வேண்டும், எப்போது எதிர் கொள்ள வேண்டும் என்பதை தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

மன ரீதியாக, உடல் ரீதியாக, பண ரீதியாக மற்றவர்கள் நம்மை நசுக்க ஆரம்பிக்கும் போது நாமும் சுதாரிக்காமல் போனால் மீண்டும் அதையே தொடர்ச்சியாக செய்ய ஆரம்பிப்பார்கள். உடலில் வலிமை இருக்கும் போதே அவர்களிடமிருந்து தப்பித்து விடுதல் நன்று.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation

10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial*
- *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com



மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க...
விற்க...
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
KABIS
• Life Insurance
• Critical Illness
• Disability
• RESP
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc.,


RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.